432

வள்ளுவர்

# தமிழ் வாசகம்

முதற் படிவம்—சிறப்பு

நூற்பதிப்புக் கழகம்
ஈரோடு

TB
031(6
N5)
131490.

# வள்ளுவர் தமிழ் வாசகம்

முதற் படிவம் — சிறப்புப் பகுதி

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
5 - AUG 1957
MADRAS

ஆசிரியர்கள் :

**வித்துவான் எஸ். நாகராசன், M.A., B.T.**
தலைமைத் தமிழாசிரியர்,
தூய மேரி பெண்டிர் போதனா முறை உயர்நிலைப் பள்ளி,
சேலம்.

**புலவர் நா. சுந்தரராசனார்,**
தலைமைத் தமிழாசிரியர்
தூய மைக்கேல் உயர்நிலைப் பள்ளி, கோவை.

**சிவலிங்க நூற்பதிப்புக் கழகம்,**
**ஈரோடு.**

பதிப்புரிமை] 1957 [விலை நயே பைசே 62
(அணா 10)

முதற் பதிப்பு அக்டோபர் 1955
திருத்திய இரண்டாம் பதிப்பு மே 1956
„ மூன்றும் பதிப்பு ஜூன் 1957

Approved for class use by the Madras Text Book Committee, Madras. Vide Fort St. George Gazette Supplement to part I-B (14-A) dated 4—4—1956 Page No. 21

TB
631(6)
1957

Paper used : 24 lbs. Double Crown white printing

131490

சாஜன் எலக்டிரிக் பிரஸ், சென்னை-1.

# முன்னுரை

"வள்ளுவர் தமிழ் வாசகம்" என்று பெயரிடப்பட்டுள்ள இப்பாட நூல் வரிசை அரசியலாரின் பாட வியலுக்கு ஏற்ப எழுதப்பட்டுள்ளது. மாணவருலகம் மகிழ்ந்து போற்றும் வண்ணம் ஓவியங்களும் பாடங்களும் இந்நூலில் இடம் பெற்றுள்ளன. கலைச் செல்வம் கவினுற விளங்கும் இந்நூல்கள், பல்லாண்டு மாணவர்க்குக் கற்பித்து வந்த பயிற்சியால் உருவானவை. மாணவரது பொது அறிவை வளர்த்தற்கு இன்றியமையாததாய் இருப்பது உரைநடை. இந்த நோக்கத்தினை அடிப்படையாகக் கொண்டே வரையப்பட்டுள்ள இத்தொடர் நூல்களில் பாட வியலுக்கேற்பப் பலவகைப் பாடங்கள், பாடக் கேள்விகள், பயிற்சிகள், அரும்பதங்கள் ஆகியன தொகுக்கப்பட்டுள்ளன. இவை மாணவர்களது சொற்களஞ்சியத்தைப் பெருக்கும் தன்மை வாய்ந்தன.

செய்யுள் கலை நலம் அமைந்தது; மாணவரது கருத்தை ஈர்ப்பது; இயற்கை எழிலைத் தெரிவித்து இன்பம் பயப்பது. கவியின் கருத்தை யறிந்து, கவி நலம் காணக் கற்பிக்கப்படுமாயின், அது கல்லா மக்களின் உள்ளத்தையும் கவினுறப் பிணிக்கும். இக்கருத்தை மேற்கொண்டே கற்பிக்கத் தக்க செய்யுள்கள் பாடங்களாகத் தொகுக்கப்பட்டுள்ளன.

ஒவ்வொரு பாடத்திற்கும் இறுதியில் விதி வருமுறையில் இலக்கணப் பாடங்கள், அதற்குப் பின் பயிற்சிகள் ஆகியன தரப்பட்டுள்ளன.

தக்க முறையில் ஒழுங்கு செய்து வனப்போடு இந்நூல் வரிசை வெளிவர உதவி புரிந்த சென்னை, C. A. H. இந்து முஸ்லிம் உயர்நிலைப் பள்ளித் தலைமைத் தமிழாசிரியர் உயர்திரு. **வித்துவான் பு. செல்வராசனூர்** அவர்களுக்கு எம் மனமார்ந்த நன்றி.

ஈரோடு
1-10-'55

**ஆசிரியர்கள்**

# தேசீய கீதம்

ஜன கண மன அதி நாயக ஜயஹே
பாரத பாக்ய விதாதா
பஞ்சாப ஸிந்து குஜராத மராட்டா
திராவிட உத்கல வங்கா
விந்திய ஹிமாசல யமுனு கங்கா
உச்சல ஜலதி தரங்கா
தவசுப நாமே ஜாகே
தவசுப ஆசிஷ மாங்கே
காயே தவ ஜய காதா
ஜன கண மங்கள தாயக ஜயஹே
பாரத பாக்ய விதாதா
ஜயஹே! ஜயஹே! ஜயஹே!
ஜய ஜய ஜய ஜயஹே!

# நாட்டு வணக்கம்

---

இந்தியாவின் சுகதுக்கங்களை நிர்ணயிக்கிற நீதான் மக்கள் எல்லோருடைய மனத்திலும் ஆட்சி செலுத்துகிறாய்.

நின் திருநாமம், பஞ்சாபையும் சிந்துவையும் குஜராத்தையும் மஹாராஷ்டிரத்தையும் திராவிடத்தையும் ஒரிஸாவையும் வங்காளத்தையும் உள்ளக் கிளர்ச்சி யடையச் செய்கிறது.

அது விந்திய ஹிமாலய மலைகளில் எதிரொலிக்கிறது;

யமுனை கங்கை நதிகளின் இன்ப நாதத்தில் கலக்கிறது;

இந்தியக் கடல் அலைகளால் ஜபிக்கப்படுகிறது;

அவை நின் ஆசியை வேண்டுகின்றன; நின் புகழைப் பாடுகின்றன.

இந்தியாவின் சுக துக்கங்களை நிர்ணயிக்கிற உனக்கு வெற்றி, வெற்றி, வெற்றி.

# உள்ளுறை


| எண் | பொருள் | | பக்கம் |
|---|---|---|---|
| | **உரைநடைப் பகுதி** | | |
| 1. | பண்டைத் தமிழ் நாடு | ... | 1 |
| 2. | பாரதி கண்ட புலவர்கள் | ... | 7 |
| 3. | நூல் நிலையம் | ... | 13 |
| 4. | காந்தி அடிகள் | ... | 20 |
| 5. | ஆபுத்திரன் | ... | 28 |
| 6. | இரும்பு | ... | 35 |
| 7. | சித்தன்னவாசல் ஓவியங்கள் | ... | 41 |
| 8. | தமிழ்த் தென்றல் | ... | 49 |
| 9. | ஔவை தூது (நாடகம்) | ... | 55 |
| | **செய்யுட் பகுதி** | | |
| I. | வாழ்த்து | | |
| 1. | கடவுள் வாழ்த்து | .... | 63 |
| 2. | நாட்டு வாழ்த்து | ... | 63 |
| II. | இயற்கை அழகு | | |
| 1. | அழகிய மயில் | ... | 66 |
| 2. | கடல் | ... | 66 |
| III. | அறவுரை | | |
| 1. | நன்னெறி | ... | 68 |
| 2. | நீதிநெறி விளக்கம் | ... | 70 |
| 3. | நீதி வெண்பா | ... | 72 |
| IV. | காதை | | |
| 1. | புத்தரும் மகனை இழந்த தாயும் | ... | 74 |
| V. | பல்சுவைப் பகுதி | | |
| 1. | துன்பத்திற்கு மேல் துன்பம் | ... | 79 |
| 2. | தமிழ்நாட்டின் சிறப்பு | ... | 79 |
| 3. | வானவில் | ... | 79 |

# சங்ககாலத் தமிழகம்

# 1. பண்டைத் தமிழ் நாடு

"செந்தமிழ் நாடெனும் போதினிலே இன்பத் தேன் வந்து பாயுது காதினிலே" என்று நம் தேசீயக் கவி பாரதியார் பாடியுள்ள பாடலை நாம் அனைவரும் அறிவோம். அவ்வாறு சிறப்பித்துச் சொல்லப்பட்ட தமிழ் நாடு தமிழகம் என்றும் வழங்கப் பெறும். இத் தமிழகம் சங்க காலத்தில் மிகவும் சிறப்புற்று விளங்கியது. சங்க காலத்தைத் தமிழகத்தின் பொற்காலமென்று கூறலாம். அக்காலத் தமிழகத்தின் வடக்கெல்லையாக வேங்கட மலையும் தெற்கெல்லையாகக் குமரி முனையும், கிழக்கெல்லையாக வங்கக் கடலும், மேற்கெல்லையாக அரபிக்கடலும் அமைந்திருந்தன.

இவ்வெல்லைக்குள் அமைந்த தமிழ் நாடு சேரர், சோழர், பாண்டியர் என்ற முடியுடை மூவேந்தர்களால் முறை தவருது ஆளப்பட்டு வந்தது. இதையே தற்பொழுது நாம் பண்டைத் தமிழ் நாடு என்று கூறுகின்றோம்.

வேழநாடு என்று புகழப்பட்ட சேரநாடு, மலையாள மாவட்டம், கொச்சி, திருவிதாங்கூர் நாடுகள், கொங்கு நாட்டின் ஒரு பகுதி ஆகிய இப்பகுதிகளைக் கொண்டு விளங்கியது. சேரர்கள் வஞ்சிமா நகரைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி புரிந்தனர். மலைவளம் மிக்க நாடு இந் நாடாகும். மலைபடு பொருள்களாகிய ஆரம், தேக்கு, மிளகு முதலிய பொருள்கள் இங்கிருந்து வெளிநாடுகளுக்கு அனுப்பப்பட்டு வந்தன. இந்நாட்டை ஆண்ட சேர மன்னர்களுள்

உதியஞ்சேரலாதன், நெடுஞ்சேரலாதன், செங்குட்டுவன் என்போர் சிறந்தவர்களாவர். இவர்களுடைய கொடி விற்கொடி. இவர்கள் அணிந்தது பனம்பூ மாலை.

ஆற்று வளத்தால் சோற்றுவளம் மிக்கு அழகுடன் விளங்குவது சோழநாடு. தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி மாவட்டங்களும், தென்னுர்க்காடு மாவட்டத்தின் ஒரு பகுதியும் சேர்ந்ததே பண்டைச் சோழ நாடாகும். என்றும் வற்ருத பொன்னியும், அதன் கிளை ஆறுகளும் பாய்ந்து இந்நாட்டை வளப்படுத்துகின்றன. இத்தகைய நீர் வளம் பொருந்திய நாட்டை வள நாடு என்றும், அதனை ஆண்ட அரசரை வளவர் என்றும் ஆன்ருேர் அழைத்தனர். இதனுலன்ருே தமிழ் மூதாட்டி ஔவை, "சோழ வளநாடு சோறுடைத்து" என்று போற்றினர்! சோழ மன்னர்கள் உறையூர், காவிரிப்பூம்பட்டினம் ஆகியவற்றைத் தலைநகராகக் கொண்டு தம் நாட்டை ஆண்டனர். அவர்களுள் சிறந்தவனுக விளங்கியவன் கரிகாலன் என்ற மன்னனேயாவான். சோழ மன்னர்களின் கொடி புலிக்கொடி; மாலை ஆத்திமாலையாகும்.

புனல் பெருகும் பொருநை, வைகை ஆகிய நதிகளால் பொலிவுற்று விளங்குவது பாண்டிய நாடு. மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி மாவட்டங்களைத் தன்னகத்திற் கொண்டதே பண்டைப் பாண்டிய நாடாகும். 'முத்துக் குளிப்பதொரு தென் கடலிலே' என்று பாரதியாரால் பாராட்டப்பட்ட இடம் பாண்டிய நாட்டைச் சேர்ந்ததேயாகும்.

பாண்டியர்கள் முச்சங்கம் நிறுவி முத்தமிழை வளர்த்தனர்; புலவர் பலரை ஆதரித்து எண்ணிறந்த நூல்கள் வெளிவரச் செய்தனர். **உக்கிரப் பெருவழுதி, நெடுஞ்செழியன்** என்ற மன்னர்கள் பாண்டியர்களுள் சிறந்தவராவர். பாண்டியர்கள் முதலில் **தென் மதுரை, கபாடபுரம்** என்னும் நகரங்களிலிருந்து தம் நாட்டை ஆண்டனர்; பிறகு அந்நிலப் பகுதிகள் வெள்ளத்தால் அழிந்து விடவே, இப்போதுள்ள மதுரையைத் தலைநகராகக் கொண்டு ஆண்டனர். இவர்களின் கொடி, மீன் கொடி; இவர்கள் சூடியது வேப்பம்பூ மாலையாகும்.

பண்டைத் தமிழரசர்கள் காலத்திலேயே நம் நாட்டுக் கடல்வாணிகம் சிறந்திருந்தது. அக்காலத்தில் நம் நாட்டு வாணிகர் உரோமாபுரி, எகிப்து முதலிய நாடுகளுக்குப் பலவகையான பொருள்களை அனுப்பி வைத்தனர். அவை பிற நாட்டாரால் பெரிதும் போற்றப்பட்டன. மேலும் பண்டைத் தமிழரசர்கள் சிற்பம், ஓவியம் ஆகிய கலைகளைச் சிறப்பித்ததோடு அமையாமல் அவற்றை ஆதரித்துப் பேணியும் வந்தனர்.

'ஆண்களோடு பெண்களும் சரி நிகர் சமானமாக வாழ்வோம் இந்த நாட்டிலே' என்றவாறு அக்காலத் தமிழ் நாடு இருந்தது. பழங்காலத் தமிழகம் கல்வியிற் சிறந்து விளங்கியது. ஆண்களும் பெண்களும் அக்காலத்தில் புலவர்களாக இருந்தனர். பெண்பாற் புலவர்களில் ஔவையாரை அறியாதார் யார்? அவர் அரசியல் தூதராகவும் பணியாற்றினர். பெண்களில் பலர் வீர மகளிராகத் திகழ்ந்தனர்.

தமிழரசர்களின் மரபு மிகவும் பழமையானது ; கல்தோன்றி மண் தோன்றாக் காலந் தொட்டு இந் நாட்டில் இருந்து வருவது. தமிழரசர்களில் பலர் இமயம் வரை படையெடுத்துச் சென்றனர் ; இமயத்தின் கொடுமுடியில் தத்தம் சின்னங்களைப் பொறித்தனர்; இமயம் செல்லுங்கால் எதிர்த்த மன்னரைப் போரில் வென்று சிறையிலிட்டனர்; வரவேற்ற மன்னருக்கு அடைக்கலந் தந்து நட்புப் பூண்டனர்; வட நாட்டிலிருந்து திரும்புங் காலத்து ஏராளமான திறைப் பொருளைப் பெற்று வந்தனர்; தமிழ் நாட்டுச் சிறப்பு மேலும் சிறக்க அவற்றைப் பயன் படுத்தினர்.

இது காறும் கண்டவை பழந்தமிழ் நாட்டுப் பண்டைச் சிறப்புகளாகும். பண்டைப் பெருமையைப் பற்றிப் பேசுவதால் பயனொன்றுமில்லை. நம் நாட்டின் இன்றைய நிலை யாது ? இதனை உயர்த்த நாம் செய்யத் தக்கன யாவை ? என்பனவற்றைப் பற்றி எண்ண வேண்டும். தாய் மொழியாகிய தமிழ் மொழியைப் போற்ற வேண்டும். சிறந்த தமிழ் நூல்களைப் பிழையறப் படித்தல் வேண்டும். படித்தவாறு நல்வழியில் ஒழுகித் தமிழ் நாட்டின் நற்குடி மக்களாக விளங்குவதே நாம் செயலில் காட்ட வேண்டிய நற்பணியாகும்.

## அருஞ்சொற்பொருள்

முறை தவறாது - நீதி தவறாது, மலைபடுபொருள் - மலையில் தோன்றும் பொருள். ஆரம் - சந்தனம். பொன்னி - காவிரியாறு, வளவர் - சோழர். எண்ணிறந்த - கணக்கில் லாத. பொலிவு - அழகு. பேணி - பாதுகாத்து. மரபு -

குலம், கொடுமுடி - மலைச்சிகரம். சின்னம் - அடையாளம். பொறித்தனர் - பதித்தனர். திறைப்பொருள் - கப்பப்பொருள். பணி - வேலை. பிழை யற - குற்றமில்லாமல். நிறுவி - ஏற்படுத்தி.

## கேள்விகள்

1. சங்ககாலத் தமிழகத்தின் எல்லைகள் யாவை ?
2. தமிழ்நாட்டைப் பழங்காலத்தில் ஆண்ட மன்னர்கள் யாவர் ?
3. சேரநாட்டைச் சார்ந்த பகுதிகள் யாவை ?
4. சோழநாட்டைச் சார்ந்த பகுதிகள் யாவை ?
5. சோழர்களுள் சிறந்தோரைக் கூறுக.
6. பாண்டிய நாட்டைச் சார்ந்த மாவட்டங்கள் யாவை ?
7. பாண்டியர்களுள் சிறந்தோரைக் கூறுக.
8. மூவேந்தர்களுக்குரிய கொடிகளையும், மாலைகளையும் குறிப்பிடுக.
9. மூன்று தமிழ் மன்னர்களுடைய தலைநகரங்களைக் கூறுக.
10. தமிழ் நாட்டின் சிறப்பைத் தொகுத்து எழுதுக.
11. நாம் நம் நாட்டுக்குச் செய்யத்தக்கன யாவை ?

## பயிற்சி

வாக்கியங்களில் அமைக்க:— முறைதவருது, நிறுவி, மாவட்டம், பொறித்தனர், சின்னங்கள், பேணி.

## இலக்கணம்

எழுத்துக்களுக்கு இரு வடிவங்கள் உண்டு. ஒன்று **ஒலிவடிவம்**. மற்ருென்று **வரிவடிவம்**. ஒலி என்பது ஓசை. தும்மல், இருமல் முதலிய ஓசைகள் எழுத்தாகா.

**ஒலிவடிவம்:** பொருள் அறிந்துகொள்ளத் தக்கதாக இருக்கும் ஒலியே எழுத்து. அஃது ஒலி எழுத்து எனப் படும். அஃது அணுக்களது கூட்டத்தால் உண்டாகிறது. இது ஒலியாகவே எழுத்தை அறிவிப்பதால் இதனை ஒலி வடி வம் என்கிறோம்.

**வரிவடிவம்:** ஒலிக்குரிய சில அடையாளமே வரி வடிவ மாகிய எழுத்து. இது உயிரெழுத்து, மெய்யெழுத்து, உயிர் மெய் எழுத்து, ஆய்தவெழுத்து என நான்குவகைப்படும். ஒலிகளே ஒலி எழுத்துக்கள். அவ்வொலி எழுத்துக்களைக் குறிப்பிடும் அடையாளங்களாகிய அ, ஆ, க, கா போன்ற தமிழ் எழுத்துக்கள் 247-ம் வரி எழுத்துக்களாகும்.

## இலக்கணப் பயிற்சி:

1. எழுத்தின் வடிவம் எத்தனை வகைப்படும் ? அவை யாவை ?
2. தமிழிலுள்ள எழுத்துக்கள் எத்தனை ?
3. தமிழ் எழுத்துக்கள் எத்தனை வகைப்படும் ? அவை யாவை ?
4. தும்மல், இருமல் முதலிய ஓசைகள் ஏன் எழுத் தாகா ?
5. வரிவடிவம், ஒலிவடிவம் என்று கூறப்படுவதற்குக் காரணம் யாது ?

## 2. பாரதி கண்ட புலவர்கள்

பாரதியார் இக்காலப் புலவர்களுள் தலைசிறந்தவர். இவர் சிறு வயதுமுதலே தமிழ்க்கவிகள் இயற்றுவதில் வல்லுநராக இருந்தார். இவர் தமிழ் நூல்களை ஐயம் திரிபற ஓதி உணர்ந்தவர்; உள்ளதை உள்ளபடி உய்த்துணரும் ஆற்றல் பெற்றவர். இவர் சங்க காலத்திலும் இடைக்காலத்திலும் விளங்கிய புலவர்களைச் சீர்தூக்கலானார். இவருக்கு மூன்று புலவர்களின் நூல்களே சிறந்தவை எனத் தோன்றின. எனவே, அப்புலவர்களைப் புகழலானார்; அப் புலவர்கள் இயற்றிய நூல்களையும் போற்றலானார். உண்மைக் கவிஞன் உள்ளமே பிற உண்மைக் கவிஞர்களைக் காண இயலும்.

பாரதியார் கண்ட புலவர்கள் திருவள்ளுவர், கம்பர், இளங்கோவடிகள் என்ற மூவராவர். திருவள்ளுவர் இயற்றிய நூல் திருக்குறள். கம்பர் இயற்றியது இராமாயணம். இளங்கோவடிகள் அருளிச் செய்தது சிலப்பதிகாரம். வள்ளுவர் நூல் உலகினுக்கே உரியது என்றனர் பாரதியார். கம்பர் நூல் கவிச் சுவைமிக்கதென்றும், சிலப்பதிகாரம் நெஞ்சை அள்ளும் தன்மையது என்றும் அவர் கூறினர். இவைகளைப் பற்றி மற்றொரு பாடலில் கம்பன், வள்ளுவன், இளங்கோ ஆகிய இம்மூவரைப் போல் பூமிதனில் எங்கும் கண்டதில்லை என்றும், இது வெறும் புகழ்ச்சியல்லவென்றும், உண்மை என்றும் அவர் கூறியுள்ளார்.

தமிழ்ப் புலவர்களில் தலைவராய் விளங்குபவர் திருவள்ளுவர் ஆவர். இவர் இன்றைக்கு ஆயிரத் தெண்ணூறு ஆண்டுகளுக்குமுன் வாழ்ந்தவர்.

முன்காலத்தில் அரசர்களிடத்தில் வள்ளுவர் என் ஞெருவகை அரசியல் அலுவலர் இருந்தனர். அவர் அரசன் அறிவிக்கும் செய்திகளைப் பட்டத்து யானை மீது ஏறி இருந்து பறையறைந்து மக்களுக்கு அறி விப்பவர். அம்மரபில் தோன்றியவரே நம் வள்ளு வர். அவர் கல்வி கேள்விகளில் மிக்கவராகி விளங் கியதால் திருவள்ளுவர் என்று போற்றப்பட்டார்.

அவர் நெய்தற்ருெழிலை மேற்கொண்டனர் என்றும், வாசுகி என்ற கற்பரசியாரைத் தம் இல்லக் கிழத்தியாகக் கொண்டு இல்லறம் நடத்தினர் என் றும், சென்னையில் உள்ள திருமயிலையில் வாழ்ந்து வந்தவர் என்றும் அவரைப்பற்றி வழங்கும் கதை கள் பல.

திருவள்ளுவர் இயற்றிய திருக்குறள் உலகப் பொது நூலாகும். அஃது உலகத்தில் உள்ள மக்கள் அனைவரும் ஒப்புக்கொள்ளும் உண்மைகளைக் கூறுகின்றது. அதனுலேயே அதற்குப் பொதுமறை என்ற வேறு பெயரும் உண்டாயிற்று. திருவள்ளுவர் அறம், பொருள், இன்பம் ஆகிய மூன்றையும் பற்றி 1330 குறள்கள் பாடியிருக்கிருர். மூன்று பகுதி களாக அந் நூல் அமைந்திருப்பதால், அதற்கு முப்பால் என்னும் பெயரும் வழங்குகிறது.

அளவில் சிறிய குறட்பாக்களைக் கொண்டது திருக்குறள். ஆயினும் அப்பாக்கள் மிகச் சிறந்த விரிந்த கருத்துக்களை எடுத்துக் கூறுவதில் இணை யற்றவை. அரசர் முதல் ஆண்டி வரை அந்நூலைத் தத்தம் வழிகாட்டியாகக் கொள்ளலாம், அந்நூலில் இல்லாத பொருள் உலகில் இல்லாத பொருளே

யாகும். அந்நூலைத் தமிழர்கள் யாவரும் கற்றுணரல் மிகவும் இன்றியமையாததாகும்.

கல்வியில் சிறந்தவர் கம்பர். அவரிடம் கற்பனைத் திறம், சொல் நயம் ஆகியவை சிறந்து விளங்கின. பொருட் செறிவு மிக்க கவிதைகளைப் பாடுவதில் அவர் வல்லவர். அவர் இயற்றிய இராமாயணம் தனிச் சிறப்பைப் பெற்றதாகும். அவர் வடமொழிக் கதை ஒன்றைத் தமிழ் மொழியில் தமிழ் மக்கள் பண் பாட்டிற்கு ஏற்றவாறு செய்துள்ளார். எனினும், அது தனித் தமிழ்க் காப்பியமாகத் தோன்றுகிறது. அவரது தனிப் பெரும் கல்விச் சிறப்பைக் கண்ட பிற புலவர் கள் அவரைக் "கவியரசர் கம்பர்" என்று பாராட் டினர்.

கவியரசராகிய கம்பர் ஏறக்குறைய எண்ணூறு ஆண்டுகட்கு முன் சோழ நாட்டில் திருவழுந்தூர் என்னும் ஊரில் பிறந்தவர் ; இளமையிலேயே பெற் றோரை இழந்து வருந்தினர். திருவெண்ணெய் நல் லூர் சடையப்ப வள்ளல் என்பவர் அவரை ஆத ரித்து வந்தார். அங்கு அவர் கல்வி கேள்விகளில் சிறந்து கவிஞரானார். அவரது கவிதைச் சிறப்பை யுணர்ந்த சோழ மன்னன் அவரைத் தன் அவைக் களப் புலவனாக்கினான். சோழன் அவரைக் கொண்டு தமிழ்த் தாய்க்கு ஒரு நல்லணி நல்க விரும்பினான் ; வட மொழியிலுள்ள இராமாயணத்தைத் தமிழிற் பாடும்படி வேண்டினான். கம்பரும் அந்நூலைப் பாடி அரங்கேற்றினர். இதனால் கம்பர் தம்மை யாதரித்த சடையப்ப வள்ளலுக்கும் சோழனுக்கும் அழியாப் புகழை அளித்துப் புகழ் பெற்றார்.

இளங்கோவடிகள் இயற்றிய நூல் சிலப்பதிகார மாகும். இது கோவலன், கண்ணகி வரலாற்றைக் கூறும் நூல். இளங்கோவடிகள் ஒரு துறவி. இவர் நெடுஞ் சேரலாதன் என்னும் சேர அரசனது இளைய மைந்தர். இவர் இயற்றிய சிலப்பதிகாரத்தில் மூன்று மன்னர்களையும் பற்றிக் கூறியிருக்கிறார். மூவரையும் வேற்றுமையின்றி. நடு நிலைமையில் இருந்து பாடி யுள்ளார். இதனால் இவரது நேர்மை விளங்கும்.

இளங்கோவடிகள் தம் தமையனுக்காகவே துறவுபூண்டார். ஒருகால் சோதிடன் ஒருவன் நெடுஞ் சேரலாதனது அவைக்கு வந்தான். அவன் அவை யிலுள்ள அச் சேர மன்னனின் மக்களைப் பார்த்து, "இருவரில் இளையவனே ஆட்சிக்குரியவன்" என் றான். இதைக் கேட்ட மூத்தவனான சேரன் செங் குட்டுவன் சீற்றம் கொண்டான். உடனே இளங்கோ எழுந்து தாம் துறவியாகப் போவதை அறிவித்தார். சோதிடன் கூற்றைப் பொய் யாக்கித் துறவுக் கோலத்துடன் மீண்டார். பின் னர், அவர் வஞ்சி மாநகரை அடுத்திருந்த குண வாயிற் கோட்டம் என்னும் துறவிகளின் உறை விடத்தை அடைந்து தவஞ் செய்யலாயினர். தமையன் செங்குட்டுவனுக்குத் தேவையான காலத்தே அறவுரைகளையும், அறிவுரைகளையும் கூறி வருவாராயினர்.

பாரதியார் இம் மூவரையும் உரிய முறையில் பாராட்டி இருப்பதை அவரது பாடல்களிலிருந்து நாம் அறிந்து கொள்ள வேண்டும். நாமும் இப்புல வர்கள் பாடியருளிய நூல்களைப் படித்துக் கவிஞர்

களின் திறமையை உணர்ந்து பாராட்டக் கடமைப் பட்டவராவோம். இதுவே நாம் பாரதியாருக்கு மட்டுமின்றி, அவர் பாராட்டிய புலவர்களுக்கும் செய்யும் கைம்மாருகும்.

## அருஞ்சொற்பொருள்

ஐயம் = சந்தேகம். திரிபு = ஒன்றை மற்ருென்ருக நினைப் பது. உய்த்துணரும் = ஆராய்ந்து அறியும். சீர் தூக்கல் = சிறப்பினை ஆராய்ந்து அளவிடுதல். அறைந்து = ஒலிக்கச் செய்து. இல்லக்கிழத்தி = மனைவி. இணையற்றவை = ஒப்பற் றவை. சொல் நயம் = சொல்லின்பம், பொருட் செறிவு = கருத்து மிகுதி. இன்றியமையாதது = முக்கியமானது. அளித்து = காப்பாற்றி. அள்ளும் = கவரும். நேர்மை = நடு நிலைமை. கைம்மாறு = பதில் உதவி.

## கேள்விகள்

1. பாரதியார் பிற்காலப் புலவர்களுள் தலைசிறந்தவர் என்பது எதனுல் ?
2. பாரதியார் கண்ட புலவர்கள் மூவர் யாவர் ?
3. திருவள்ளுவர் பெயர்க் காரணங் கூறுக.
4. திருவள்ளுவரைப் பற்றிக் கதைகளாக வழங்குவன யாவை ?
5. திருக்குறளைப் பற்றி வரைக.
6. கம்பர் கவித் திறத்தைப் பற்றிக் கூறுக.
7. கம்பர் வரலாற்றை வரைக.
8. இளங்கோவடிகள் யார் ? அவர் துறவு பூண்ட தேன் ?
9. இளங்கோ நேர்மையானவர் என்பதை எப்படி அறியலாம் ?

## பயிற்சி

1. வாக்கியங்களில் அமைத்து எழுதுக:-

ஐயந்திரிபற, உய்த்துணரும், பறையறைந்து, கற்றுணர்ந்து, பொருட்செறிவு, இணையற்றவை.

2. மேற்கண்ட சொற்களைப் பிரித்து எழுதுக.

## இலக்கணம்

1. ல, ள, ழ- இவ்வெழுத்துக்களது உச்சரிப்பு வேறுபாடுகளை நன்கு தெரிந்து கொள்க. இவற்றுள் ஓர் எழுத்திற்குப் பதில் வேறெழுத்துத் தவறி எழுதப்படுமாயின் பொருள் மாறும்.

| | |
|---|---|
| தலை—தலை | அலை—நீர் அலை |
| தளை—கட்டு | அளை—தயிர் |
| தழை—இலை | அழை—கூப்பிடு |

2. ன, ண, ந வேறுபாடு: இவ்வெழுத்துக்கள் வரும் இடங்களைக் கவனிக்கவும்.

| | |
|---|---|
| நான்—தன்மை ஒருமைச் சொல் | தினை—தானியம் |
| நாண்—கயிறு | திணை—குலம் |
| மனை—வீடு | கன்னி—பெண் |
| மணை—அமர்வதற்குரிய பீடம் | கண்ணி—மாலை |

3. 'ந' என்னுமெழுத்து மொழிக்கு முதலில் தான் வரும். ன, ண என்ற எழுத்துக்கள் மொழிக்கு இடையில்தான் வரும்.

4. ர, ற வேறுபாடு: இவை இரண்டும் மொழிக்கு முதலில் வாரா.

| | |
|---|---|
| இர—பிச்சை எடு | கூரிய—கூர்மையான |
| இற—சா | கூறிய—சொன்ன |

## இலக்கணப் பயிற்சி

திருத்தி எழுதுக:

1. அன்னண் இந்று திண்பன்டம் வாங்கிநான்.
2. கண்றுக்குட்டி துல்லி ஓடும்.
3. ஏற் உளுது பயிற் நடு.
4. மளை மேல் மலை பெய்தது.

# 3. நூல் நிலையம்

நூல்கள் தொகுத்து வைக்கப்படும் இடம் நூல் நிலையமாகும். பள்ளி மாணவர்களுக்கெனத் தொகுத்து வைக்கப்பட்ட நூல்கள் நிறைந்த இடம் பள்ளி நூல் நிலையம். அங்கு ஆசிரியர்களுக்கென அமைந்துள்ள நூல் நிலையமும் உண்டு. பொது மக்களுக்கென ஊரில் நகராண்மைக் கழகத்தாலோ, நாட்டாண்மைக் கழகத்தாலோ நடத்தப்படும் நூல் நிலையங்களும் உண்டு. சிற்றூர்களில் வாழ்பவர்களுக்குக் கொடுத்து வாங்குவதற்கெனப் பெரிய மோட்டார் வண்டிகளில் அமைக்கப்பட்ட இயங்கு நூல் நிலையங்களும் இருக்கின்றன. மேலும், மாதக் கட்டணத்தின் உதவியைக் கொண்டு வணிக முறையில் நடத்தப்படும் நூல் நிலையங்களும் இருக்கின்றன. தனிப்பட்டோர் தமக்கெனச் சிறிது சிறிதாக நூல்களை வாங்கி வைத்து நூல் நிலையமாக விளங்கச் செய்தலும் உண்டு. இவ்வாறு நூல் நிலையங்கள் பல வகைப்படும்.

நூல் நிலையங்கள் மக்களின் அறிவை வளர்க்கின்றன. பள்ளியில் படிக்கும் மாணவன், படித்த பாடத்திற்குத் துணையாக இருக்கும் நூல்களைப் படித்துப் பயனடைகிறான். ஆசிரியர் தாம் கற்பிக்கும் பொருளுக்கு ஏற்றவற்றை நூல் நிலையத்திலுள்ள நூல்களைப் படிப்பதன் மூலம் பெற்றுத் தம் அறிவை அகலப் படுத்திக் கொள்கின்றார். அலுவலகங்களில் வேலை செய்து வீடு திரும்பியோர் நூலக நூல்களை வாங்கிப் படித்து மனவமைதி பெறுகின்றனர். வயதானவர்களும், ஓய்வு மிகுந்தவர்களும் நூல் நிலையங்களிலுள்ள நூல்களைப் படிப்பதன் மூலம் தங்கள்

பொழுதைச் சிறந்த முறையில் கழிக்கின்றனர். எனவே, நூல் நிலையங்கள் ஒரு வகையில் மக்கள் தாங்கள் பெற்றுள்ள அறிவை வளர்த்துக் கொள்ளப் பெரிதும் துணை புரிகின்றன.

இந்நூல் நிலையங்களில் பல, அரசியலார் உதவியைப் பெறுகின்றன ; சில பெறுவதில்லை. பொருளுடையோரின் தாராள இயல்பினாலும், மாதக்கட்டணம் பெறுவதனாலும் சில நடைபெறுகின்றன. எங்ஙனமாயினும் இவை நன்கு பாதுகாக்கப்பட வேண்டும். யாவருக்கும் பயன்படக்கூடிய நூல்களைச் சேர்த்து வைக்க வேண்டும். நூல் நிலையத்தில் நல்லறிவைப் புகட்டி, நன்னெறியில் ஒருவனை நடக்கச் செய்து, நற்பயன் அளிக்கத் தக்க நூல்கள் பல இருத்தல் வேண்டும். இந்நூல்களை அமர்ந்து கற்றற்குரிய இட வசதிகள் நூல் நிலையங்களில் இருத்தல் நல்லது. இத்தகைய நூல் நிலையங்கள் நாடெங்கும் பரவுதல் மிகவும் தேவையாகும்.

நம் நாட்டில் போதுமான அளவு பொது நூல் நிலையங்கள் ஏற்படவில்லை. மேனாட்டை நோக்குமிடத்து நம் நாடு இத்துறையில் முன்னேறவில்லை என்றே கூற வேண்டும். சென்னையிலுள்ள "கன்னிமாரா" பொது மக்கள் நூல் நிலையம், சென்னைப் பல்கலைக் கழக நூல் நிலையம், அண்ணாமலைப் பல்கலைக் கழக நூல் நிலையம் ஆகிய இவைகளே பொது மக்கள் நூல் நிலையங்களாக உள்ளன. நாட்டாண்மை, நகராண்மைக் கழகங்கள் ஒரு சில ஆண்டுகளாக இத் துறையில் ஊக்கம் காட்டி வருகின்றன.

நூல் நிலையங்கள் ஏற்படுத்தி விட்டால் மட்டும் போதாது. அவற்றைத் தக்க முறையில் மக்களுக்குப்

பயன்படச் செய்ய வேண்டும். நூல் நிலைய அலுவலாளர்கள் யாவரும் உரிய பயிற்சிகளைப் பெற்றிருக்க வேண்டும். நூல்களை விரும்பிக் கேட்போருக்கு அவர்கள், விரைவில் மகிழ்ச்சியோடு வழங்கும் இயல்பு படைத்தவராக இருக்க வேண்டும். இச் செயல் நூல்

பொது மக்கள் நூல் நிலையம்

நிலைய அலுவலரின் தனிச் சிறப்பாகக் கருதப்படும். மக்களுக்கு மேலும் மேலும் நூல்களைப் படிக்க வேண்டும் என்னும் ஆர்வம் உண்டாக வேண்டும். இந்த ஆர்வம், நிலையத்தின் தலைவராலேயே ஊட்டப்படக் கூடும்.

நூல் நிலையத்திற்கு வருபவர்களில் ஒரு சிலர் நிலையத்தின் பொது நலனைக் கவனியாமலும் இருக்கலாம். நூல்களைச் சரியான முறையில் கையாளாமையால் அவை அழுக்காகலாம்; சீர்கெடலாம்; அட்டை

முதலியவை கிழிந்தும் போகலாம். ஒருசிலர் வேண்டு மென்றே நூல்களில் உள்ள பகுதிகள் சிலவற்றைக் கிழித்து எடுத்துச் செல்வர்; படங்களையும் கிழிக்க முற்படுவர். நூல் நிலைய அலுவலர் இவ்வாறு நடை பெருமல் கவனித்துக் கொள்ள வேண்டும். நூல் நிலையத்திற்கு வருபவர்களும் அலுவலர்களோடு ஒத்துழைக்க வேண்டும்.

நகரங்களில் மட்டும் நூல் நிலையங்கள் இருத்தல் போதாது. ஒவ்வொரு சிற்றூரிலும் நூல் நிலையம் அமைக்கப் படவேண்டும். நூல் நிலைய வளர்ச்சிக் கென நம் நாட்டில் ஓர் இயக்கம் தோன்றியுள்ளது. அது செல்வம் பெற்ற சீரியர் உதவியுடனும் அரசிய லாரின் ஆதரவுடனும் நூல் நிலையப் பணிக்குப் பாடுபடவேண்டும். எங்கு ஒரு நூல் நிலையம் ஏற்படு கின்றதோ, அங்கு அதனுடன் ஒரு படிப்பகத்தையும் அமைக்க வேண்டும். இவற்ருல் நாடு கல்வி மணம் பெறும். எழுத்தறிவின்மை மிக விரைவில் ஒழியும்.

நூல் நிலையங்களில் பலவகை மக்கள் கூடுவர். இளைஞர் முதல் முதியோர் வரையும், ஏழை முதல் செல்வந்தர் வரையும் ஒன்று கூடும் இடங்களாக அவை அமையும். இவர்கள் யாவரும் ஒன்று கூடி ஒற்றுமையை வளர்க்க அவை பயன்படுகின்றன. அவை வாழ்விற் கேற்ற வழிகாட்டிகளாக உள்ளன. பழங்காலத்து நூல்களையும், தற்காலத்து நூல்களை யும் ஒரு சேரக் காணும் இடங்களாக அவை அமை கின்றன. அவை காலத்தால் வேறுபட்ட கவிஞர் களை நூல் உருவத்தில் ஒன்று சேர்க்கின்றன. இச் சேர்க்கையால் மக்கள் புதுமையில் பழமையையும்,

பழமையில் புதுமையையும் கண்டு தங்கள் வாழ்க்கையைச் சீர் செய்து கொள்ளக்கூடும்.

நூல் நிலைய நன்மைகளை அளவிட்டுக் கூறி விட முடியாது. மனச் சோர்வைப் போக்குவதில் நல்ல நூல் ஒரு நண்பனாக இருக்கின்றது. அறிவைப் புகட்டுவதில் அது போன்று எவரும் இருக்க இயலாது. அறியாமை என்னும் பிணிக்கு நூலே நன் மருந்தாகும். எனவே, நூல் நிலையங்களைப்போற்றி, இளம் வயதிலேயே அவற்றால் கிடைக்கும் முழுப் பயனையும் கொள்ள ஒவ்வொரு மாணவனும் மாணவியும் முயலவேண்டும்.

## அருஞ்சொற்பொருள்

தொகுத்து = சேர்த்து. கட்டணம் = சந்தா. அலுவலர் = வேலை பார்ப்போர். ஆர்வம் = ஆசை. சீரியர் = சிறந்தவர்கள். ஒருசேர = ஒருங்கே. சீர் செய்து = சிறப்புற அமைத்து. இயலாது = முடியாது. பிணி = நோய்.

## கேள்விகள்

1. நூல் நிலையம் என்பது யாது? பல வகை நூல் நிலையங்களைப்பற்றி விளக்குக.
2. நூல் நிலையம் எவ்வெவருக்குப் பயன்படுகின்றது? எங்ஙனம்?
3. நூல் நிலையங்கள் எங்ஙனம் அமைந்திருத்தல் வேண்டும்?
4. நம் தமிழ் நாட்டிலுள்ள பொது நூல் நிலையங்கள் யாவை?
5. நூல் நிலையங்களைப் பயன்படச் செய்யும் முறை யாது?
6. நூல் நிலைய அலுவலரின் கடமை யாது?

7. சிற்றூர்களில் நூல் நிலையங்கள் எங்ஙனம் அமைக்கப்படலாம் ?

8. நூல் நிலையங்களால் ஏற்படும் பயன்கள் யாவை ?

## பயிற்சி

1. உன் பள்ளியில் உள்ள நூல் நிலையம் பொது நூல் நிலையமா அல்லது பள்ளிக்கு மட்டும் உரியதா ?

2. உன் வகுப்புக்குத் தனி நூல் நிலையம் உண்டா ? நீ புத்தகங்களை வாங்கிப் படிப்பதுண்டா ?

3. பள்ளி நூல் நிலையத்தைப்பற்றிக் கட்டுரை ஒன்று எழுதுக.

4. நூல் நிலையப் புத்தகங்களை ஆழ்ந்து படிக்கவும். படிக்கும்போதே அரும் பதங்கள், சொற்றொடர்கள், பழமொழிகள், அரிய செய்திகள் ஆகியவற்றை ஒரு கையேட்டில் குறித்துக்கொள்ள வேண்டும். கதைச் சுருக்கம் அல்லது வர்ணனைக் குறிப்புகள் ஆகியவற்றையும் குறித்துக்கொள்ளலாம்.

## இலக்கணம்

1. சொற்கள் பல சேர்ந்து பொருள் தருவது சொற்றொடர். அவை சரியான நிலையில் அமைக்கப்படவேண்டும். எழுவாய், பயனிலை, செயப்படுபொருள்கள் சரியான நிலையில் அமையச் சொற்றொடர்கள் எழுதப்படுதல் வேண்டும். பொருள் புரியாத நிலையில் எழுதுதல் கூடாது.

2. பிறமொழிச் சொற்களைக் கலவாது எழுதுதல் நல்லது. பிற மொழிச் சொற்களைக் கலவாது எழுதினால் இனிமையாய் இருக்கும். இதனை அறிந்து பிறமொழிச் சொற்களை விலக்குதல் வேண்டும்.

3. கீழ்க் காணும் பிறமொழிச் சொற்களுக்குத் தூய தமிழ்ச் சொற்களைக் கூறுக:- அக்கினி, அசுத்தம், ஆஸ்தி, தபால், நகல், ஷாப்பு, வாட்ச்சு, டிரைவர், லைப்ரரி. பூஜை, ரதம், பங்கஜம்.

சொல்லாக்கம்:-ஓர் எழுத்துத் தனித்து நின்றோ அல்லது பல எழுத்துக்கள் தொடர்ந்து நின்றோ பொருள் தரின் அது சொல்லாகும். அச்சொல் நான்கு வகைப்படும்.

பசு—பெயர்ச்சொல்
வந்தது—வினைச்சொல்
மற்று—இடைச்சொல்
நனி—உரிச்சொல்

பெயர்ப் பகுதி :

வலைஞன் (வலை-பகுதி)
மார்பன் (மார்பு-பகுதி)
பொன்னன் (பொன்-பகுதி)
கலைஞன் (கலை-பகுதி)

வினைப் பகுதி :

செய்தான் (செய்-பகுதி)
உடைந்து (உடை-பகுதி)
உண்டான் (உண்-பகுதி)
கண்டனர் (காண்-பகுதி)

பகுதிகளைக் கூறுக : கேட்டான், கொன்றாள், நடந்தனர், தின்றது, நின்றன, அறிஞன், மூக்கன், கூனி.

# 4. காந்தி அடிகள்

உலகம் போற்றும் உயர்ந்த நூலைச் சீரிய முறையில் செய்தளித்த திருவள்ளுவர் பெருமான்,

"உள்ளத்தால் பொய்யா தொழுகின் உலகத்தார்
உள்ளத்துள் எல்லாம் உளன்"

என்று கூறினர். அதற்கேற்றபடி தற்காலத்தில் நம்மிடையே வாழ்ந்து மறைந்தவர் நம் நாட்டுத்



மகாத்மா காந்தி

தந்தை மகாத்மா காந்தி அடிகளேயாவர். திருவள்ளுவர் கூறிப் போந்த திருக்குறளில் கண்ட அறங்களின்படி ஒழுகியவர் ஒருவர் உளரேல் அவர் காந்தியடிகளே.

காந்தியடிகள் போர்பந்தர் என்னும் ஊரில் 1869-ஆம் ஆண்டு அக்டோபர் இரண்டாம்

நாளன்று பிறந்தார். இவருக்கு இவர் பெற்றோர் மோகன்தாஸ் கரம்சந்த் காந்தி என்ற பெயரை இட்டார்கள். இவருடைய தாய் இவருக்கு இராமனிடத்துப் பக்தி ஏற்படுமாறு செய்தார். இவர் இளமையில் ஒரு நாடகத்துக்குச் சென்றிருந்தார். அரிச்சந்திரன் வாய்மைக்காகப் பட்ட துன்பத்தை இவர் கவனித்தார்; தாமும் அரிச்சந்திரன்போல் உண்மையே பேச வேண்டும் என்று உறுதி கொண்டார். காந்தியார் இளமையில் சில கெட்ட பிள்ளைகளோடு சேர்ந்து பல கெட்ட பழக்க வழக்கங்களை மேற்கொண்டிருந்தார். பிறகு இவருக்குத் தம் பிழை தெரிய வந்தது. குற்றங்களுக்காக இவர் வருந்தினார்; பெற்றோரிடம் மன்னிப்புக் கேட்டார். அன்று முதல் காந்தியாரின் வாழ்க்கை தூய்மைபெறத் தொடங்கியது.

காந்தியார் தம் பதினெட்டாம் வயதில் "பாரிஸ்டர்" படிப்புக்காக இங்கிலாந்து சென்றார். தம் தாயிடம் தாம் கள் குடிப்பதில்லை என்றும், ஊன் உண்பதில்லை என்றும், பிற தீய செயல்களில் தலையிடுவதில்லை என்றும் உறுதி மொழி கூறினார். இங்கிலாந்தில் இவர் பல அல்லல்களுக்கு ஆளாயினார்; ஆயினும், தாம் கொண்ட உறுதியை மட்டும் மறவாமல் காத்து வந்தார். இதனால் இவரது உணவை இவரே சமைத்துக்கொள்ளவும் நேர்ந்தது; இவர் சமையல் வேலையை இழிவாகக் கருதவில்லை; அதனை உடல் நன்மைக்குரிய உடலுழைப்பே என்று எண்ணினார்.

காந்தியடிகள், "பாரிஸ்டர்" பட்டம் பெற்றதும் தாய்நாடு வந்து சேர்ந்தார். இவருக்கு வழக்கறிஞர் தொழிலில் அவ்வளவு விருப்பம் உண்டாகவில்லை.

இவர் சிலகாலம் பம்பாயில் வழக்கறிஞராக இருந் தார். இவர் ஒரு முறை தாதா அப்துல் கம்பெனியா ருக்காகத் தென் ஆப்பிரிக்கா செல்ல வேண்டி நேர்ந்தது. அந்நாடு ஆங்கிலேயரின் ஆட்சிக்கு உட்பட்டது. இந்தியாவிலிருந்து பலர் அங்குச் சென்று உறைந்து வந்தனர். ஆங்கு ஆங்கிலேயர் இந்தியரை மிக இழிவாக நடத்தி வந்ததை இவர் கண்டார். மேலும், காந்தியாரும் இந்தியர் என்ற காரணத்தால் பல துன்பங்களுக்கு ஆளானுர். முதல் வகுப்பில் பயணம் செய்த இவரைப் புகைவண்டியி லிருந்து இறக்கிவிட்டான் ஒரு வெள்ளையன். இவரை ஓர் ஆங்கிலேய வண்டிக்காரன் கன்னத்தில் அடித்து விட்டான். ஒன்பது மணிக்குமேல் உலவச் சென்ற தற்காக ஒரு வெள்ளையப் போலீஸ்காரன் இவரை உதைத்தான்.

வழக்குக்கெனத் தென்னுப்பிரிக்கா சென்ற காந்தியடிகள் அங்கு வாழ்கின்ற இந்தியர்களின் இன்னலைப் போக்க அங்கேயே சில ஆண்டுகள் தங்க வேண்டியதாயிற்று. காந்தியார் அங்கே செய்த தொண்டுகளுக்கு அளவு இல்லை. தென்னுப்பிரிக்கா அரசாங்கம் இந்தியர்களைப் பல வகையில் விலக்கி வைத்தது; சாதாரண வசதிகளையும் செய்ய மறுத் தது; பலவகையான தொல்லைகளைக் கொடுத்து வந்தது. காந்தியார் இவற்றை யெல்லாம் எதிர்த்து அறமுறையில் போராடினுர். இவர் நடத்திய அறப் போருக்கு ஆதரவு வலுத்தது. இந்தியரின் உறுதி யைக் கண்ட அரசாங்கம் அவர்களது குறையை நீக்கச் சம்மதித்தது. இந்தியருக்குத் தீமை தரும் வகையில் இருந்த சட்டங்கள் பல நீக்கப்பட்டன.

தென்னுப்பிரிக்காவில் தம் வேலை முடிந்ததும் காந்தியார் இந்தியா வந்து சேர்ந்தார். இந்திய மக்கள் இவரைக் கொண்டாடிப் போற்றலாயினர். அன்று முதல் இவர் தம் தாய்நாட்டு மக்களுக்குப் பணி செய்ய முடிவு செய்தார்; பல அறப்புரட்சிகளை நடத்திவந்தார்; இடையில் முதல் உலகப் போரில் ஆங்கிலேயர்களுக்கு உதவியும் புரிந்தார். ஆங்கி லேயர்கள் தம் வாக்குப்படி நடக்காததால் காந்தி யார் ஒத்துழையாமை இயக்கத்தைத் தொடங்கினுர். இந்த இயக்கத்தில் கலந்துகொண்டு பணி செய்த வர்கள் நூருயிரக் கணக்கான தொண்டர்களாவர். அரசினர் பலவகை அடக்குமுறைகளைக் கையாண்டு பலரைச் சிறைச்சாலையில் அடைத்தனர். காந்தி யாரும் சிறை சென்ருர்.

இந்தியர் வறுமையற்றும், உரிமை பெற்றும் வாழவேண்டுமானுல், அவர்கள் ஒரு சில திட்டங் களைப் பின்பற்றி நடக்கவேண்டும் என்று காந்தியார் எண்ணினுர். அதற்கான திட்டங்களை அவர் வகுக்க லானுர். அவையே கதர் இயக்கம், சுதேசி இயக்கம், மதுவிலக்குத் திட்டம், தீண்டாமை ஒழிப்பு, குடி சைத் தொழில் முன்னேற்றம் என்பன. இவற்றை நிர்மாணத் திட்டம் என்றும் கூறுவர்.

காந்தியார் ஏற்படுத்திய நிர்மாணத் திட்டத்தை, அவர் தலைமையில் நம் மக்கள் நடைமுறையில் செய்து வரலாயினர். உலக மக்கள் யாவரும் காந்தி யாரது செல்வாக்கை உணரலாயினர். ஆங்கில அரசாங்கம் எதைச் செய்வதாயினும் இந்தியர் சார் பில் இவருடைய ஒத்துழைப்பையே நாடலாயிற்று.

1939-ஆம் ஆண்டு இரண்டாம் உலகப் போர் தொடங்கியது. அந்தப் போரில் இந்தியா உதவி செய்ய வேண்டும் என்று ஆங்கிலேயர் கூறினர். 'உரிமை இல்லாத இந்தியா உதவாது' என்று காந்தியார் கூறிவிட்டார். ஆங்கிலேயர் நம் நாட்டுத் தலைவர்கள் பலரைக் கைது செய்தனர். காந்தியாரையும் சிறையிலிட்டனர். போர் முடிந்ததும் தலைவர்கள் யாவரும் விடுதலை அடைந்தார்கள். காந்தியாரின் பெருமையைக் கண்ட ஆங்கிலேயர், இனி இந்தியரின் ஒத்துழைப்பு இன்றி இந்தியாவை ஆள முடியாது என்பதைக் கண்டனர்; இந்தியாவுக்கு விடுதலை வழங்குவதாக முடிவு செய்தனர். 1947-ஆம் ஆண்டு ஆகஸ்டுத் திங்கள் 15-ஆம் நாளில் நாம் விரும்பிய விடுதலை நமக்குக் கிடைத்தது. உரிமைக்காகவே வாழ்க்கை முழுவதும் பலவகைப் போராட்டங்களை நடத்தி வந்த காந்தியார், 1948-ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 30-ஆம் தேதி மாலையில் எதிர்பாராத நிலையில் இவ்வுலக வாழ்வை நீத்து விண்ணவரானார். இவரது மறைவிற்கு உலகமே துக்கம்கொண்டு மாளாத் துயரடைந்தது. உண்மை நண்பரை இழந்தோமேயென மேனாடுகள் வருந்தலாயின.

காந்தி அடிகள் உண்மையே உருவானவர்; தூய்மையின் இருப்பிடமானவர்; நேர்மையில் இவருக்கு நிகர் இவரே. ஆனால், பகைவனுக்கும் அருளும் அருட்பண்பு இவரிடம் உண்டு. இவர் பிறர்க்கெனவே வாழும் இயல்பினர்; பிறர் வருந்தத் தாம் காணார்; மக்கள் யாவரும் ஒரு சமூகம் என்னும் மனப் பண்பு பெற்றவர்; தெய்வ பக்தி மிக்கவர்;

ஒரே கடவுள் என்ற உறுதி பூண்டவர்; வாய்மையே கடவுள் என்பது இருவருடைய முடிந்த முடிவு. இவரது வாழ்க்கை உலகத்திற்கே ஒரு சிறந்த எடுத்துக் காட்டாகும். காந்தியடிகளை விரும்பும் நாம் ஒவ்வொருவரும் இவரைப் பின்பற்றி நடப்பதை நமது கடமையாகக் கொள்ள வேண்டும். இவருடைய பொன் மொழிகளைக் கற்றும், கேட்டும் அதன்படி ஒழுக வேண்டும். இதுவே நாம் நம் நாட்டுத் தந்தைக்குச் செய்யும் கைம்மாறாகும்.

## அருஞ்சொற்பொருள்

மாளா - இறவா. உறுதி மொழி - மாருத சொல். விண்ணுலகம் - வானுலகம். தொண்டு - பணி.

## கேள்விகள்

1. திருவள்ளுவர் கூறியபடி வாழ்ந்தவர் யார்? திருவள்ளுவர் கூறியது யாது?
2. காந்தியடிகளுக்குப் பெற்றோர் இட்ட பெயர் யாது?
3. இவருக்கு இராம பக்தி உண்டான தெப்படி?
4. இவர் உண்மை பேசுவதென உறுதி கொண்டது எப்போது?
5. காந்தியார் தாயாருக்குக் கொடுத்த வாக்குறுதிகள் யாவை?
6. காந்தியார் ஆப்பிரிக்கா சென்றதேன்?
7. அப்போது ஆப்பிரிக்காவின் நிலை எப்படி இருந்தது?
8. காந்தியார் ஆப்பிரிக்காவில் செய்தவை யாவை?

9. காந்தியார் ஒத்துழையாமை இயக்கத்தைத் தொடங்கியதேன் ?

10. நிர்மாணத் திட்டம் என்பது யாது ?

11. ஆங்கில அரசாங்கம் காந்தியாரின் ஒத்துழைப்பை ஏன் நாடலாயிற்று ?

12. இரண்டாம் உலகப் போரில் காந்தியார் உதவ மறுத்ததேன் ?

13. இந்தியருக்கு ஆங்கிலேயர் உரிமை கொடுத்தது எப்பொழுது ? ஏன் கொடுத்தனர் ?

14. காந்தியார் எப்போது மறைந்தார் ?

15. காந்தியடிகளின் குணங்களை வரைக.

## பயிற்சி

1. வாக்கியங்களில் அமைத்து எழுதுக :—நம்பிடையே, பழக்கவழக்கம், உறுதிமொழி, அடக்குமுறை, மனவமைதி.

2. பழக்கவழக்கம் என்பது ஒரு மரபுத் தொடர். இது போன்ற மரபுத் தொடர்கள் நான்கைக் கூறுக.

3. மகாத்மா காந்தியின் வாழ்க்கையில் பல நிகழ்ச்சிகள் நடைபெற்றுள்ளன. அவற்றுள் ஒன்றை அறிந்துகொள்க.

4. காந்தி அடிகளது உருவப் படங்களையும், அவரைப் பற்றிப் பலர் பாராட்டி இயற்றிய பாடல்களையும் திரட்டி வைத்துக் கொள்க.

## இலக்கணம்

சிலர் வழக்கமாகப் பிழையான சொற்களைச் சரியான சொற்கள் என்றெண்ணிப் பேசுவர் ; அப்படியே எழுதுவர். அவற்றை நீக்கவேண்டும்.

| பிழைச் சொற்கள் | சரியான சொற்கள் |
| --- | --- |
| சுதந்திரம் | சுதந்தரம் |
| சிலவு | செலவு |
| பாத்து | பார்த்து |
| கயிறை | கயிற்றை |

கீழ்க்காணும் வழூஉச் சொற்களைத் திருத்தி எழுதுக :—

மாத்திஞன், றொம்ப, நோம்பு, அடமழை, ஆத்துக்கு, நேத்திக்கு, நஞ்சை, எண்ணை, துடப்பம்.

பிழைகளைத் திருத்தி எழுதுக :— இந்த மாசம் ரொம்பச் செலவாயிட்டுது. சுவற்றில் மாட்டி யிருந்த கெடியாரம் கீளே விளுந்து ஒடஞ்சு போச்சு. ரிப்பேர்ச் செலவு வேறு. வேஷ்டி ரெண்டு ஜதை வாங்கினேன். பாக்கியோ நெரயா இருக்குது. அடுத்த மாசம் நிச்சய மாத்தாரேன்.

# 5. ஆபுத்திரன்

வாரணசி என்பது காசி நகரின் பெயராகும். அங்கு அபஞ்சிகன் என்னும் வேதியன் ஒருவன் தன் இல்லக் கிழத்தியுடன் இல்வாழ்க்கை நடத்தி வந்தனன். அவனது இல்லாள் பெயர் சாலி. அவள் கணவனுக்குச் செய்யலாகாத பிழை செய்தாள். அதனால் அவள் அச்சமுற்றுத் தன் பிழைக்குக் கழுவாய் தேடத் தென்னாடு போந்து குமரியாட விரும்பினாள்.

அவள் பல கல் தொலைவு நடந்தாள்; இரவு பகல் என்ற எண்ணமின்றிச் சென்று கொண்டே இருந்தாள். அவள் சூல் கொண்டிருந்தாள் ஆதலின், ஒரு நாளிரவு தான் செல்லும் வழியில் ஓர் ஆண் மகவை ஈன்றாள். ஈன்ற மகவுக்கு இரக்கம் காட்டாத சாலி, அதனை எடுத்துச் சென்று அண்மையிலிருந்த ஒரு தோட்டத்தில் கிடத்தினாள்; பிறகு தன் வழியே தொடர்ந்து செல்வாளாயினள்.

தாய்ப்பாலும் உண்ணாத அக்குழவி பசித் துன்பத்தால் ஓயாமல் அழுது கொண்டிருந்தது. குழந்தையின் அழுகை ஒலி கேட்ட ஒரு பசு வந்து அக் குழந்தையை நாவால் நக்கிப் பாலூட்டிற்று. இங்ஙனம் ஏழு நாட்கள் அஃது அக்குழவியைப் பாதுகாத்தது. வயனங்கோடு என்னும் ஊரிலிருந்து தன் மனைவியுடன் பூதி என்ற வேதியன் அவ்வழி வந்தான். அவன் குழவி அழுத குரலைக் கேட்டு இரக்கங்கொண்டான். "இது பசுவின் மகவு அல்ல; என் மகவே," என்று கூறி அக் குழந்தையை எடுத்து

ஊர் சென்ருன்; அதனை மகிழ்ச்சியுடன் வளர்த்து வந்தான். ஆவினுல் காக்கப்பட்ட குழந்தையாதலின் ஆபுத்திரன் என்று அதற்குப் பெயரிட்டான்.

பூதி, ஆபுத்திரனுக்கு உரிய காலத்தில் தன் குலத்திற்கேற்ற கல்விகளை நன்கு பயிற்றுவித்தான். ஒரு சமயம் அவ்வூரில் ஒரு யாகம் நடைபெற இருந்தது. மற்ருெரு வேதியன் வீட்டில் யாகத்திற்கு வேண்டிய செயல்கள் நடைபெற்றன. ஆபுத்திரன் அங்குச் சென்றபோது, ஒரு பசு யாகத்தில் பலி இடுவதற்காகக் கட்டப்பட்டு இருந்ததைக் கண்டான். ஆவின் துயரத்தை அறிந்த அவன் அதனை அந்நாளிரவே கவர்ந்து ஊருக்கு வெளியே கொண்டு போய்விட்டான். பசுவைக் காணுத வேதியர்கள் அதனைத் தேடிச் சென்றனர்; பசுவையும் ஆபுத்திரனையும் கண்டு அவனை நையப் புடைத்தனர். அந்தப் பசு வேதியர் தலைவனை முட்டி வயிற்றைக் கிழித்துவிட்டுக் காட்டிடையே சென்று மறைந்தது.

வேதியர் ஆபுத்திரனைப் பலவாறு ஏசிப் பேசித் துரத்திவிட்டனர். பூதியும் அவனைத் தூய்மையற்றவனென்று எண்ணி நீக்கி விட்டனன். பின்னர், ஆபுத்திரன் பிச்சையெடுத்து உணவுண்ண வேண்டியதாயிற்று. பசுவைத் திருடிய கள்வனென்று கூறி வேதியர் அவனுடைய பிச்சைப் பாண்டத்தில் கல்லிடத் தொடங்கினர். ஆபுத்திரன் வேறு புகலின்றித் தென் மதுரையை அடைந்தான். அங்குள்ள கலை நியமம் என்ற சிந்தாதேவி கோவிலின் முன்னேயுள்ள அம்பலத்தையே தன் இருப்பிடமாகக் கொண்

டிருந்தான். அவன் கையிற் பிச்சைப் பாண்டத்தை ஏந்தி வீடுதோறும் சென்று வாங்கிவந்த உணவைக் குருடர், செவிடர், முடவர், பிணியாளர் முதலியோருக்கு இட்டு எஞ்சியதைத் தான் உண்டு வந்தான்.

அங்ஙன மிருக்கையில், ஒருநாள் இரவு சிலர் வந்து அவனிடம் தங்கள் அவல நிலையைக் கூறி உணவு தர வேண்டினர். ஏற்ற உணவை எளிய



ஆபுத்திரன் எளியவருக்கு அன்னமிடல்

வருக்கு அளித்து எஞ்சியதை உண்டு உறங்கத் தொடங்கிய ஆபுத்திரன் என்ன செய்வதென்றறியாது வருந்தினன். அச்சமயம் சிந்தாதேவி எழுந்தருளி அவனிடம் அட்சயபாத்திரம் ஒன்றை நல்கினள். அப்பாத்திரம், கொடுக்கக் கொடுக்க வளர்ந்து வரும் இயல்புடையது. அதற்கு அமுதசுரபி என்பது பெயர். அத்தகைய பாத்திரத்தைப் பெற்ற ஆபுத்

திரன் அளவுகடந்த மகிழ்ச்சி யடைந்தான்; சிந்தா தேவியைச் சிந்தையாரத் துதித்து வணங்கினான்; இரந்து வந்தோருக்கு உணவளித்தான். அன்று முதல் எல்லா உயிர்களும் உணவுண்டு அவனை வாழ்த்தின.

இதனை அறிந்த இந்திரன் ஆபுத்திரனின் ஈகைக்கு மகிழ்ந்து, அவனுக்கு வரங் கொடுப்பதற்கு வந்தனன். அவன் ஆபுத்திரனை அணுகி, "நான் உன் ஈகையால் மகிழ்ந்தேன். வரங் கொடுப்பதற்கு வந்துள்ளேன்; நீ விரும்புவது யாது? கேள். வேண்டியது தருவேன்" என்று கூறினான். ஆபுத்திரன் உரக்கச் சிரித்து, "தேவர் நாட்டு இறைவனே! இல்லாதவர்க்கு உணவளிக்கும் இத்தெய்வப் பாத்திரம் ஒன்றே எனக்குப் போதும். வேறொன்றும் வேண்டேன்," என்று அவனை மதியாது கூறினன். இதனால் இந்திரன் மிக்க சினங்கொண்டான். 'இரப்போர் இல்லையாகும்படி செய்கிறேன்' என்று கூறி, நாடு நன்கு செழிக்குமாறு மேகங்களை ஏவி மழை பொழிவித்தான். அதனால் எங்கும் இரப்போர் இல்லா தொழிந்தனர். உண்போரைப் பெருமையால் ஆபுத்திரன் மிகவும் வருந்தினான். தனக்காக மட்டும் அமுதசுரபியைப் பயன்படுத்த அவன் விரும்பவில்லை.

அப்போது சாவகத் தீவிலிருந்து வந்த சிலர் அந்நாட்டுப் பஞ்சத்தின் நிலையை எடுத்துக் கூறினர்; அவனை அந்நாடு செல்லுமாறு ஏவினர். ஆபுத்திரன் அந்நாடு அடைந்து இரப்போரைப் புரக்க எண்ணிக் கலம் ஏறிச் செல்வானாயினன். அக்கலம் மணிபல்லவத் தீவில் ஒருநாள் தங்கியது. அவன்

அத்தீவில் இறங்கினன். அத்தீவின் காட்சியைக் கண்டு களித்திருந்தான். ஆபுத்திரன் கலத்தில் ஏறிவிட்டதாக எண்ணிய மீகாமன் அவனை அத் தீவிலேயே விட்டுச் சென்றுவிட்டான். கலம் தன்னை விட்டுச் சென்றது என்பதை அறிந்த ஆபுத்திரன் மனக்கவலை மிக்கு, 'பலர்க்கும் உணவளித்துப் பாது காக்கும் இப்பாத்திரத்தை வைத்துக்கொண்டு யாரு மில்லாத் தீவில் இரேன்' என்று கூறி அப்பாத்தி ரத்தைத் தொழுதான்; பின்னர் அதனைக் கோமுகி என்னும் பொய்கையில் விடுத்து, "ஆண்டிற்கு ஒரு முறை தோன்றுவாயாக; கருணைமிக்கு எல்லோரை யும் காக்க வல்லமை யுள்ளோர் எவரேனும் வரின் அவர் கையில் புகுவாயாக" என்று கூறிப் பட்டினி கிடந்து அவ்விடத்திலேயே உயிர் துறந்தான்.

ஆபுத்திரன் கையிலிருந்த அமுதசுரபி என்னும் அந்த அட்சய பாத்திரம், **மணிமேகலை** மணிபல்ல வத்திற்கு வந்தபோது அவள் கையில் புகுந்தது. அதனைக் கொண்டு அவள் யாவர்க்கும் வேண்டிய அளவு உணவைப் படைத்தாள்.

ஆபுத்திரனது வரலாற்றைக் கூறும் பகுதி **மணி மேகலை** என்னும் நூலில் உள்ளது. ஐம்பெருங் காப் பியங்களுள் ஒன்முன மணிமேகலை சொல் நயமும், பொருள் நயமும் செறிந்துள்ள சிறப்பான நூல்.

### அருஞ்சொற்பொருள்

சூல் - கருப்பம். காதம் - பத்துக்கல் தொலைவு. ஈன் ருள் - பெற்றெடுத்தாள். யாகம் - வேள்வி. புடைத்தனர் - அடித்தனர். புகலின்றி - ஆதரவின்றி. கலைநியமம் - சிந்தா தேவியின் கோவில். அம்பலம் - பொதுவிடம்.

எஞ்சியதை = மிச்சமானதை. மீகாமன் = கப்பலோட்டுபவன்.

## கேள்விகள்

1. சாலி என்பவள் யார் ? அவள் வீட்டை விட்டு வெளியேறியதேன் ?
2. சாலியின் இரக்கமற்ற குணத்திற்கு ஒரு சான்று கூறுக.
3. குழவியைக் காத்தது எது ? அதனை வளர்த்தது யார் ? எங்ஙனம் ?
4. வேதியர் வெறுக்குமாறு ஆபுத்திரன் செய்த செயல் யாது ?
5. ஆபுத்திரன் ஊரை விட்டுச் சென்றது ஏன் ? தென் மதுரையில் அவன் செய்த தென்ன ?
6. அமுதசுரபியின் இயல்பினைக் கூறுக.
7. அமுதசுரபி யாரால் எப்பொழுது யாருக்குக் கொடுக்கப்பட்டது ?
8. இந்திரன் அவனிடம் ஏன் வந்தான் ?
9. இந்திரன் ஆபுத்திரனிடம் கூறியது என்ன ?
10. ஆபுத்திரன் இந்திரனுக்குக் கூறிய மறுமொழி யாது ?
11. ஆபுத்திரன் மணிபல்லவம் சென்றதேன் ?
12. மணிபல்லவத்தில் ஆபுத்திரன் செய்தது யாது ?
13. பாத்திரத்தைக் கோமுகியிலிட்டு ஆபுத்திரன் கூறிய தென்ன ?
14. அமுதசுரபி யார் கையில் சென்றது ? எவ்வாறு பயன்பட்டது ?

## இலக்கணம்

பெயர்ச் சொல் ஆறு வகைப்படும் :

புகழேந்தி பாடுகிறான்—புகழேந்தி பொருட் பெயர்

காடு அடர்ந்துள்ளது—காடு இடப் பெயர்

மாலையில் விளையாடு—மாலை காலப் பெயர்

வாழை இலை அதிக விலை—இலை சினைப் பெயர்

பால் வெள்ளை நிறமுடையது—வெள்ளை பண்புப் பெயர்

உதவி செய்தல் நல்லது—உதவி தொழிற் பெயர்.

வினைச்சொல் :

நாய் ஓடிற்று

குழந்தை விளையாடுகிறது

ஓடிற்று, விளையாடுகிறது என்ற சொற்கள் நாய், குழந்தை ஆகியன என்ன செய்தன என்பதைக் குறிக்கும் சொற்களாக உள்ளன. இவை வினைச்சொற்களாகும்.

எண்ணுப் பெயர்கள் : ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு முதலியன எண்ணைக் குறிப்பதால் எண்ணுப் பெயர் என்று பெயர் பெறும்.

இவை அடை மொழிகளாக வரும் காலத்து முதலாவது, இரண்டாவது, பத்தாவது என்ற முறையில் வரும். மேலும் ஓர், இரு, மூ, அறு என்ற முறையிலும் வரும். அவை சொற்களுடன் சேர்ந்துவரும் வகையினைக் காண்க:

| | | |
|---|---|---|
| ஒரு புலி | மூன்றாவது எண் | மூவுலகு |
| ஓர் ஆடு | நான்காவது வீடு | ஐம்பால் |
| இரு விழி | எட்டாவது பெட்டி | அறுவகை |

# 6. இரும்பு

"இரும்பைக் காய்ச்சி உருக்கிடுவீர்" என்று இயம்பினர் பாரதியார். அவ்வாறு அவர் கூறக் காரணம் யாது?

உலகில் நடைபெறும் வேலைகள் எதுவாயினும் இரும்பின்றிச் செய்தல் இயலாது. ஊசிமுதல் உயரிய பெருமை வாய்ந்த பொறி வரையுள்ள பொருள்கள் பலவும் இரும்பாலேயே இயற்றப்படுகின்றன. இரும்பில்லையேல் நாகரிக உலகம் நசித்துப்போம் என்பதில் ஐயமில்லை.

இரும்பு ஐவகை உலோகங்களுள் ஒன்று. பொன் வெள்ளி, செம்பு, ஈயம் என்பன பிற உலோகங்கள். இரும்பு மற்றைய எல்லா உலோகங்களிலும் உறுதியானது; உபயோகமுள்ளது; மிகுதியாய் அகப்படக் கூடியதுமாகும். இரும்புக்கு ஒளி இல்லை. பொன்னின் நிறையில் மிகக் குறைந்தது. ஆயினும், அது பொன்னைக் காட்டிலும் நமக்குப் பல வகைகளில் பயன்படும் பொருளாக இருக்கிறது. இரும்பிற்குக் கரும் பொன் என்று ஒரு பெயருமுண்டு.

இரும்பு பெரும்பாலும் கனிகளிலிருந்தும், சிறுபான்மை மலையருவி பாயுமிடங்களிலிருந்தும் எடுக்கப்படுகின்றது. மக்கள் கனிகளில் உள்ள இரும்பை நிலத்தை வெட்டிச் சேகரிப்பர். அது கனிகளில் வேறு பொருள்களோடு சேர்ந்து கட்டிகளாகவே கிடைக்கும். அருவி பாயுமிடங்களிலுள்ள இரும்பு மணலோடு சேர்ந்து துகளாகக் காணப்படும். அவைகளை உருக்கிச் சலாகைகள் ஆக்குவார்கள்.

கனியிலிருந்து வெட்டிச் சேர்க்கப்படும் பொருள் கனியம் எனப்படும். அதனைத் தாது என்றும் கூறலாம். அது தூய்மையற்றிருக்கும்; பிற பொருள்களோடு சேர்ந்திருக்கும். அதனைக் காய்ச்சிய பின்னரே இரும்பைப் பிரிப்பர். தாதுக்கள் சூடேற்றப்படுகின்றன. அதனால் அவற்றிலுள்ள ஈரம், கரிவளி ஆகியவை நீங்கும். பின்னர் தாதுக்களுடன் நிலக்கரி, சுண்ணாம்புக் கற்கள் ஆகியவற்றைக் கலந்து பெரிய ஊது உலைகளில் இடுவர்.

ஊது உலை சுமார் 80 அடி உயரமும் 40 அடி அகலமும் உள்ளதாக இருக்கும். அதன் வெளிப்புறம் எஃகுத் தகடுகளினாலும், உட்புறம் கற்களினாலும் அமைந்திருக்கும். ஊது உலையின் அடிப்பாகத்தில் அமைக்கப்பட்டுள்ள குழாய்களின் மூலமாகச் சூடுபடுத்தப்பட்ட கடுங்காற்றைச் செலுத்துவர். உலையிலிட்ட கரி எரியும். இரும்பு உருகத் தொடங்கும். உருகிய இரும்பு உலையின் அடிப்பாகத்தில் சேரும். இரும்புடன் கலந்திருந்த பிற பொருள்கள் சுண்ணாம்புக் கல்லோடு சேர்ந்து உருகும். அவை உருகிய இரும்பின் மேல் மிதக்கும் தன்மையன. அவற்றை அவ்வப்பொழுது மற்றொரு குழாயின் வழியாக வெளியேற்றுவர். உருகிய இரும்பு, உலையிலுள்ள குழாய் மூலமாக வெளியே எடுக்கப்பட்டு அச்சுக்களில் வார்க்கப்படுகின்றது. இதுவே வார்ப்பிரும்பு ஆகும்.



இரும்பு உருக்கும் உலை

வார்ப்பிரும்பு எளிதில் உடையக் கூடியது. அச்சிலிட்டுச் செய்யப்படும் இயந்திரங்கள், இரும்புச் சக்கரங்கள், மாடிப்படிகள், கட்டில்கள், கரி அடுப்புகள் ஆகிய இவை யாவும் வார்ப்பு இரும்பினல் செய்யப்படுகின்றன.

வார்ப்பிரும்பைத் தவிர வேறு இருவகை இரும்புகளுண்டு. இவை வார்ப்பிரும்பினது வேறுபட்ட உருவமேயன்றி வேறில்லை. தேனிரும்பு என்பது ஒரு வகை. இது மிகவும் தூய்மையானது. வார்ப்பிரும்பைப் பழுக்கக் காய்ச்சி அதனுடன் இரும்பு "ஆக்ஸைட்" என்ற பொருளைச் சேர்த்தால் தேனிரும்பு கிடைக்கின்றது. இது தகடாக அடிக்கவும், கம்பியாக இழுக்கவும் பயன்படும். இதிலிருந்துதான் ஆணிகள், தாழ்ப்பாள்கள் முதலிய பொருள்கள் செய்யப்படுகின்றன. மின்சாரக்காந்தம் செய்யவும் இது பயன்படுகின்றது.

மற்றொரு வகை இரும்பு எஃகு. இதற்கு உருக்கு என்ற மற்றொரு பெயரும் உண்டு. வார்ப்பிரும்பைத் தனியாக ஓர் உலையிலிட்டு மிகுதியாகச் சூடேற்றுவர்; தக்க அளவில் 'ஆக்சிஜனைச் செலுத்துவர்; செலுத்திய பின் மீண்டும் காய்ச்சுவர். அப்பொழுது இதிலுள்ள ஒரு சில பொருள்கள் நீங்குகின்றன. அங்ஙனம் காய்ச்சப்பட்ட இரும்பு எஃகாக மாறுகிறது. இவ்வகை இரும்பு மிகவும் உறுதியானது.



எஃகு காய்ச்சும் உலை

எஃகு தான் பெறும் சூட்டின் அளவிற்கேற்ப மாறுதல்களை அடையும். எஃகைப் பழுக்கக் காய்ச்சிக் குளிர்ந்த நீரில் திடீரென்று அமிழ்த்தினால் அது கண்ணாடியைப் போல் உறுதியாகவும், உடையக் கூடியதாகவும் இருக்கும். இதனாலேயே உறுதியான ஆயுதங்கள், தண்டவாளங்கள், வீட்டிற்குதவும் விட்டங்கள், இரும்புப் பெட்டிகள், இயந்திரங்கள், வெட்டுக் கருவிகள் ஆகியன எஃகினால் செய்யப்படுகின்றன.

இரும்பு நம் நாட்டில் மிகுதியாகக் கிடைப்பதில்லை. இங்கிலாந்தில் மிகுந்த அளவில் இரும்பு அகப்படுகின்றது. இரும்புத் தாதுவை உருக்கி இரும்பு செய்வதற்கும், இரும்பைக் கொண்டு பல சாமான்கள் செய்வதற்கும் நிலக்கரி இன்றியமையாதது. ஆகவே நிலக்கரியும், இரும்பும் ஒன்றுக்கொன்று அண்மையாகக் கிடைக்கும் இடங்களில் இரும்புத் தொழிற்சாலைகள் ஏற்படுகின்றன. அத்தகைய இடங்களில் இத்தொழில் ஊதியம் தரும் வகையில் நடைபெறுகின்றது.

நம் நாட்டில் பீஹார், மத்தியப்பிரதேசம், மேற்கு வங்காளம், மைசூர் ஆகிய இடங்களில் இரும்பு கிடைக்கிறது. ஜாம்ஷெட்பூர், டாடா நகர், பத்ராவதி என்னுமிடங்களில் இரும்புத் தொழில் நடைபெற்று வருகின்றது. பல்லாண்டுகளுக்கு முன்னர் தென் ஆர்க்காடு மாவட்டத்தில் இரும்புத் தொழில் சிறிது நடந்து வந்ததாகத் தெரிகின்றது.

சுரங்கத் தொழில் குறித்து நமது அரசாங்கம் ஓர் ஐந்தாண்டுத் திட்டத்தை வகுத்துள்ளது. அத்

திட்டத்தின்படி அறிஞர்கள் குழு ஒன்று நன் முறையில் வேலைசெய்து வருகின்றது. இதன் மூலம் நம் அரசாங்கம் இரும்புக் கனிகளுள்ள புதிய இடங்களைக் கண்டுபிடித்து நம் தேவையைப் பூர்த்தி செய்யும். இதனால் நம் நாடு பிறநாடுகளைவிட இரும்புத்தொழிலில் முன்னேறும் என்பதில் ஐயமில்லை.

## அருஞ்சொற்பொருள்

பொறி - இயந்திரம். நசித்து - அழிந்து. நிறை - எடை. ஊதியம் - இலாபம். கடுங்காற்று - விரைவாக வீசும் காற்று. பூர்த்தி - நிறைவு. கரும்பொன் - இரும்பு.

## கேள்விகள்

1. இரும்பின் இன்றியமையாமை யாது?
2. ஐவகை உலோகங்கள் யாவை? பொன்னோடு இரும்பின் தன்மையை ஆராய்க.
3. இரும்பு எங்ஙனம் கிடைக்கும்?
4. கனியம் என்பது யாது? அதிலிருந்து இரும்பு பிரிக்கப்படுவது எங்ஙனம்?
5. ஊது உலை எப்படி இருக்கும்? வார்ப்பிரும்பு எவ்வாறு கிடைக்கிறது?
6. வார்ப்பிரும்பின் தன்மை யாது? அது எங்ஙனம் பயன்படும்?
7. தேனிரும்பு எப்படிச் செய்யப்படுகிறது? அது எங்ஙனம் பயன்படும்?
8. உருக்கிரும்பு எங்ஙனம் செய்யப்படுகின்றது? அதன் பயன் யாது?
9. இரும்புத் தொழிலுக்கு இன்றியமையாதது எது?

10. நம் நாட்டில் இரும்பு கிடைக்கும் இடங்களையும் இரும்புத் தொழில் நடைபெறும் இடங்களையும் கூறுக.

11. நமக்கு வேண்டிய முழு இரும்பையும் பெறுவதற்கான வழி யாது?

## பயிற்சி

1. வாக்கியங்களில் அமைத்து எழுதுக:—
உயரிய, ஐவகை, பெரும்பாலும், வேறுபட்ட, சுயதேவை.

2. "இரும்பின் பயன்" என்ற தலைப்பில் ஒரு கட்டுரை வரைக.

## இலக்கணம்

அடைமொழி

மலர்கள் **இனிய** மணம் வீசும்

**படித்த** பையன்

**நன்றாகத்** தூங்கு

இனிய, படித்த, நன்றாக என்பன அடைமொழிகள்.

அடுத்து வருவது அடைமொழி. பெயர்ச் சொல்லை அடுத்து வருவது பெயரடை. வினைச் சொல்லை அடுத்து வருவது **வினையடை**.

அடைமொழிகளைக் கூறி விளக்குக:

1. தமிழ் இனிமையான மொழி.
2. வள்ளி அழகாகப் பாடினாள்.
3. சிறந்த எழுத்தாளி உயர்ந்த பரிசு பெற்றான்.
4. சிறிய வீடு பெரிய குடும்பத்திற்குப் போதாது.
5. அடியாத மாடு படியாது.

# 7. சித்தன்னவாசல் ஓவியங்கள்

ஓவியம், சிற்பம், இசை, நடனம் ஆகியவை நுண் கலைகள் என்பனவற்றுள் அடங்கும். நம் தமிழ்நாடு பண்டைக்கால முதலே இந்தக் கலைகளைப் போற்றி வந்துள்ளது. இன்றும் நிலைத்து நிற்கும் நூல்கள், சிற்பங்கள், கோவில்கள், அவற்றிலுள்ள ஓவியங்கள் முதலியவை அதற்குச் சான்று பகர்கின்றன.

சங்ககாலத்திற்குப் பின் பல்லவ மன்னர்கள் ஆட்சி ஓங்கியிருந்தது. கி. பி. மூன்றும் நூற்றாண்டிற்கும் ஒன்பதாம் நூற்றாண்டிற்கும் இடைப்பட்ட காலத்தில், அவர்கள் தனி அரசு செலுத்தி வந்தனர். அவர்கள் காஞ்சிபுரத்தைத் தலைநகராகக் கொண்டிருந்தனர்.

பல்லவ மன்னர்கள் ஓவியம் முதலிய நுண்கலைகளை ஆர்வத்துடன் வளர்த்துவந்தனர்; சிற்பிகளையும் ஓவியர்களையும் போற்றி ஆதரித்தனர். அவர்கள் காலத்திலேயே என்றும் அழியாக் கலைச் செல்வத்தைத் தமிழ்நாடு பெற்றது என்னலாம். பல்லவர்கள் கற்பாறைகளையும், மலைகளையும் குடைந்தனர். அவற்றை இறைவன் கோவில்களாக வகுத்தனர். கோவில்களை அழகு பெற அமைக்க ஓவியங்களைத் தீட்டினர். அவை சிற்ப மண்டபங்களாக விளங்குகின்றன.

பல்லவப் பேரரசர்களுள் தனிச் சிறப்பு வாய்ந்தவன் மகேந்திரவர்மன். இவன் கலையுள்ளம் படைத்தவன். தன் நாட்டில் பலவிடங்களில் சிற்பங்களைச் செதுக்கு வித்தான்; ஓவியங்களைத் தீட்டினான். ஓவியங்கள் வரைவதில் ஒப்பற்றவன் இவன். ஆகையி

ஞல் இவன் 'சித்திரப்புலி' என்ற பட்டப் பெயரை யும் பெற்ருன். இவன் காலத்தில் ஓவியங்கள் பல குகைக் கோவில்களில் வரையப்பட்டன. அவற்றுள் மாமண்டூர், மாமல்லபுரம், சித்தன்னவாசல், காஞ்சி புரம் ஆகிய இடங்களில் உள்ளவை ஒப்பற்றன. சித்தன்னவாசல் என்னுமிடத்திலுள்ள ஓவியங்கள் சிலவற்றை நாம் மனக்கண் கொண்டு காணலாம்.

சித்தன்னவாசல் புதுக்கோட்டையைச் சேர்ந்த ஓரூர். இது திருச்சிராப்பள்ளியிலிருந்து இருபது கல் தொலேவிலுள்ளது. நாரத்தாமலே புகைவண்டி நிலேயத்தி லிறங்கி இரண்டு கல் தொலே சென்ருல் இவ்வூரை அடையலாம். அங்குள்ள ஒரு சிறு மலே யின் மீது சமணர்களது கோவில் ஒன்றுள்ளது. கோவிலினுள் சென்றதும் இரண்டு தூண்களேக் காணலாம். அவை ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு நாட்டிய மகளிர் ஓவியத்தைக் காணலாம். அவை தம் முகத்தோற்றத்தால் கோவிலுக்கு வருவோரை வரவேற்பது போன்று அமைந்துள்ளன. பரத நாட்டி யப் புலமை பெற்ருேர் அவற்றைக் காணின் நாட்டி யக் கலேயின் ஒரு நிலே அவர்களின் நினேவுக்கு வரும்.

இரு ஓவியங்களுள் வலத்தூணில் உள்ள நடன மாதின் ஓவியத்தைக் காண்போம். அந் நடிகையின் தலே நன்ருக அழகு படுத்தப்பட்டுள்ளது. கூந்தல் இரு பிரிவாகப் பிரிக்கப் பட்டு வாரி முடிக்கப்பட் டுள்ளது. தலேயின் நடுவில் அணிகலன்கள் புனேயப் பட்டுள்ளன. முடிக்கப்பட்ட தலேயில் பல நிறமுள்ள மலர்கள், தாமரை இதழ்கள், இலேக் கொழுந் துகள் ஆகியவை காணப்படுகின்றன. வளேயங்களேப் போன்ற காதணிகள்

காதுகளில் தொங்குகின்றன. அவை விலை மதிப் பற்ற மணிகளால் இழைக்கப்பட்டவை போல் தோற்றமளிக்கின்றன. பலதிறப்பட்ட வேலைப் பாடுகள் அமைந்த அணிகலன்கள் கழுத்தை அலங்கரிக்கின்றன. இவையன்றி வளையல்கள், கடகங்கள், கணையாழிகள் ஆகியனவும் காணப்படு கின்றன. கணையாழி கள் வலக் கையில் உள்ளன. ஒன்று சுண்டு விரலிலும், மற்ருென்று கட்டை விரலிலுமாக உள் ளன. அவள் அணிந் துள்ள மேலாடை கள் இரண்டில் ஒன்று இடையில் நெகிழ்ந்த வண்ணம் கட்டப்பட்டிருப்பதா கத் தோன்றுகிறது. மற்ருென்று தோளைச் சுற்றி ஒய்யாரமாகப் போட்டிருப்பது போலக் காணப்படு கின்றது. ஆடைகளின் அமைப்பு, ஒழுங்கு, மடிப்பு ஆகியவற்றை ஓவியன் நேர்த்தியாக அழகு பொருந்த அமைத்துள்ளான்.

வலத்தூண் ஓவியம்

இடத்தூணில் தீட்டப்பட்டுள்ள மற்ருெரு நடிகையின் ஓவியம் சிறப்பாக அமைந்துள்ளது. அது வலத்தூணில் உள்ள நடிகையின் ஓவியத்தை

விட அழகுற அமைந்துள்ளது என்றே சொல்ல வேண்டும். இப்பெண்ணின் தலையலங்காரம் முற்றிலும் மாறுபட்டதாகக் காணப்படுகின்றது. எனினும் பிற அணிகள், ஆடைகள் ஆகியவற்றில் வேறுபாடு ஒன்றும் காணப்படவில்லை. இவ்விரு நடன மாதர்களின் ஓவியங்களிலும் மூக்கணி காணப்படவில்லை.

இடத்தூண் ஓவியம்

வலத் தூணின் உட்புறத்தில் அரசன் அரசியரின் ஓவியங்கள் தீட்டப்பட்டுள்ளன. அவை மார்பு வரையில் உள்ள ஓவியங்களாகவே உள்ளன. அரசன் விலை மதிப்பற்ற மாணிக்கங்கள் பதிக்கப் பெற்ற முடியினை அணிந்திருப்பதாகத் தோன்றுகிறது. காதில் குண்டலங்களும், கழுத்தில் மணியாரங்களும் காணப்படுகின்றன. அவன் கண்கவர் வனப்புடையவனுகத் தோற்றமளிக்கிருன். அவன் அருகிலுள்ள அரசியாரின் கூந்தல் ஒருவகையான முடியிட்டு அலங்கரித்திருப்பதாகக் காணப்படுகிறது.

கோவில் மண்டபத்தின் மேல்தளம் ஓவியப் பெட்டகமாக விளங்குகின்றது. அங்கு ஒரு தாமரைக் குளம் வரையப்பட்டுள்ளது. குளத்தில் தாமரை மலர்களும், இலைகளும் மண்டிக் கிடக்கின்றன. இவைகளுக்கிடையில் மீன்கள், அன்னங்கள், எருமைகள், யானைகள் ஆகியவை உள்ளன. மேலும் ஆங்குச் சமணர்கள் மூவர் காணப்படுகின்றனர். அவர்களுள் இருவர் தாமரை மலர்களைக் கைகளில் கொண்டுள்ளனர். ஒருவர் இடக் கையில் மலர்க் கூடை தொங்க, மலர் பறிப்பது போல் காணப்படு கின்றார். இந்த ஓவியத்தில் காணப்படும் தாமரை மலர்களும், இலைகளும், இயற்கையான தோற்றத்தை அளிக்கின்றன.

சித்தன்னவாசல் ஓவியங்கள் தாவரங்களின் காய்களைக் கொண்டே வண்ணம் தீட்டப்பட்டுள் ளனவெனத் தோன்றுகிறது. ஓவியன் இச்சித்திரங் களைச் சிவப்பு, மஞ்சள், பச்சை, கறுப்பு ஆகிய ஒரு சில நிறங்களைக் கொண்டே அழகுபடுத்தியிருக்கி றான்; அவற்றின் பின்னணி பொருத்தமாகவும் அழகாகவும் இருக்குமாறு அமைத்துள்ளான்; இதுவே அவன் கைத்திறமையையும், கலைத்திறமை யையும் விளக்கிக் காட்டுகின்றது.

மேலே காட்டப்பட்டவை பல்லவர்கள் காலத்து ஓவியங்களில் ஒரு சிலவே. இன்னும் பலவற்றைப் பலவிடங்களிலே காணலாகும். இவை கண்களுக் கும், கருத்துக்கும் விருந்தளிக்கத் தக்கன. எனவே இன்பச் செலவை மேற்கொள்ளும் மாணவர்கள் இத்தகைய பழங்கால ஓவியங்களை நேரில் சென்று காணல் வேண்டும். இவற்றால் நாம் பண்டைய

மக்களுடைய நடை, உடை, பாவனை ஆகியவற்றை அறியலாம். ஓவியம் தீட்டும் முறையையும் ஒருவாறு அறிந்து நுண்கலைகளுள் ஒன்றான இதனைக் கைக்கொள்ளலாம். ஓவியம் தீட்டுவது ஓர் இன்ப மான பொழுது போக்காக அமைந்து கவலைகளை மறக்கச் செய்யும் இயல்புடையது. எனவே, நாம் இக்கலையைக் கற்றுக் கற்றவரைப் போற்றி வாழ்வோமாக.

## அருஞ்சொற்பொருள்

நுண்கலை - நுட்பமான கலை. ஆர்வம் - பெரு விருப்பம். சிற்பி - சிற்பம் செதுக்குவோர். தீட்டினர் - வரைந்தனர். புலமை - அறிவு. புனைதல் - அணிதல். இழைக்க - செய்ய. கடகம் - கையில் அணியும் ஒருவகை அணி. நெகிழ்ந்தது - தளர்ந்தது. ஒய்யாரம்-அழகு. ஓவியப் பெட்டகம் - ஓவியச் செல்வம் நிறைந்த இடம். வண்ணம் - நிறம். குண்டலம் - காதணி.

## கேள்விகள்

1. நுண்கலைகள் என்பன யாவை? இவை நம்மவரால் போற்றப்பட்டன என்பதனை எப்படி அறியலாம்?
2. பல்லவ மன்னர்கள் ஆட்சி செய்த காலம் எது?
3. பல்லவ மன்னர்கள் சிற்பக் கலையைப் போற்றினர் என்பது எப்படி?
4. 'சித்திரப்புலி' என்பவன் யார்? அவன் இப்பட்டம் பெற்றதேன்?
5. மகேந்திரவர்மன் காலத்து ஓவியங்கள் உள்ள இடங்கள் யாவை?

6. சித்தன்னவாசல் எங்குள்ளது? அங்குள்ள ஓவியங்கள் யாவை?

7. நாட்டிய மகளிரின் தோற்றம் எவ்வாறு அமைந்துள்ளது?

8. வலத்தூணில் உள்ள நடன மாதின் ஓவியத்தைப் பற்றி வரைக.

9. இடத்தூணில் தீட்டப்பட்ட ஓவியத்தைப் பற்றி வரைக,

10. அரசன் அரசியரின் ஓவியங்கள் எவ்வாறு எங்குத் தீட்டப்பட்டுள்ளன?

11. கோவில் மண்டபத்தின் மேல் தளத்தின் மீதுள்ள ஓவியங்களைப்பற்றி வரைக.

12. சித்தன்னவாசல் ஓவியங்களில் காணப்படும் வண்ணங்கள் யாவை?

13. ஓவியங்களால் நாம் அறியத்தக்கன யாவை?

## பயிற்சி

1. வாக்கியங்களில் பயன்படுத்தி எழுதுக :— முகத் தோற்றம், புனையப்பட்டு, விலைமதிப்பற்ற, நெகிழ்ந்த, இழைக்கப்பட்ட.

2. 'பல்லவர் கால ஓவியங்கள்' என்ற தலைப்பில் ஒரு கட்டுரை வரைக.

3. நீ பார்த்த ஓவியம் ஒன்றைப்பற்றி எழுதுக.

## இலக்கணம்

**புணர்ச்சி**

(1) ஆடு + ஓடியது—ஆடோடியது

(2) மரம் + விழுந்தது—மரம் விழுந்தது

முதல் வகைச் சொற்கள் புணர்ந்த போது வேறுபட்டுள்ளது. எனவே இது **விகாரப்புணர்ச்சி.** இரண்டாம் வகைச் சொற்கள் புணர்ந்ததில் வேறுபாடு இல்லை எனவே, இது **இயல்புப்புணர்ச்சி.** விகாரப்புணர்ச்சி தோன்றல், திரிதல், கெடுதல் என மூவகைப்படும்.

**தோன்றல் விகாரம் :**

மணி + கூண்டு = மணிக்கூண்டு
பத்து + பாட்டு = பத்துப்பாட்டு

**திரிதல் விகாரம் :**

மண் + குடம் = மட்குடம்
பொன் + குடம் = பொற்குடம்

**கெடுதல் விகாரம் :**

மரம் + வேர் = மரவேர்
நிலம் + வரி = நிலவரி

### வல்லினம் மிகும் இடங்கள்

1. அ, இ, உ, எ = முன் வல்லினம் மிகும்
அ + கட்டில் = அக்கட்டில்
இ + செடி = இச்செடி
உ + பக்கம் = உப்பக்கம்
எ + பொருள் = எப்பொருள்

2. அந்த, இந்த, எந்த என்பனவற்றின் முன் வல்லினம் மிகும்.
அந்த + கடை = அந்தக்கடை
இந்த + சேலை = இந்தச்சேலை
எந்த + துண்டு = எந்தத்துண்டு

3. அப்படி, இப்படி, எப்படி-என்பனவற்றின் முன் வல்லினம் மிகும்.
அப்படி + செய் = அப்படிச்செய்
இப்படி + பேசு = இப்படிப்பேசு
எப்படி + பேசினர் = எப்படிப் பேசினர்.

# 8. தமிழ்த் தென்றல்

'பொதியத் தென்றல் வந்தது காணீர்' என்று புகழ் மிக்க புலவராகிய இளங்கோவடிகள் தாம் இயற்றிய சிலப்பதிகாரத்தின் மதுரைக்காண்டத்தில் கூறியுள்ளார். தமிழ் முனிவன் வாழும் மலையென்று பாராட்டப்பட்ட பொதிய மலையிலிருந்து வீசும் தென்றல் உடலின் தளர்ச்சியைப் போக்கும்; உள்ளத்திற்கு உணர்ச்சியை ஊட்டும். அதுபோல, மக்கள் உடல் தளர்ச்சி நீங்கி, உரிமையுணர்ச்சி கொள்ளுமாறு செய்த தமிழ்த் தென்றல் என்று போற்றப்படுபவர் நம் திரு. வி. கலியாணசுந்தர முதலியாரே ஆவார்.

சோழநாட்டில் சிறந்து விளங்கும் பதிகள் பல. அவற்றுள் கலையின் இருப்பிடமாயும், அன்பின் பிறப்பிடமாயும் விளங்குவது திருவாரூர் என்னும் பதியாகும். அவ்வூரில் வாழ்ந்த விருத்தாசல முதலியாருக்கும், சின்னம்மையாருக்கும் தோன்றியவரே திரு. வி. கலியாணசுந்தரனுர்.

'விளையும் பயிர் முளையிலே தெரியும்' என்பது நம் நாட்டுப் பழமொழி. அதற்கிணங்க இவர் இளமையிலேயே கல்வியில் கருத்துடையவராய் விளங்கினுர். குடுகுடு, கிளித்தட்டு, மற்போர், புள் ஆட்டம், கத்தி சுழற்றல் முதலிய விளையாட்டுக்களில் இவருக்கு மிகுந்த விருப்பமுண்டு. பட்டம் விடுதல், சூறைத் தேங்காய் எடுத்தல் போன்ற செயல்களிலும் இவர் ஈடுபடுவார். இவர் இளமையில் துடுக்குத்தனமும், நெஞ்சுரமும் மிக்கவராய் விளங்கினுர்.

திரு. வி. க. சென்னையிலுள்ள ஆரியன் பிரைமரிப் பாடசாலையில் தமது எட்டாம் வயதில் இரண்டாவது வகுப்பில் சேர்ந்தார்; இரண்டாண்டுகள் அப்பள்ளியில் படித்தார்; பிறகு வெஸ்லி கலாசாலையில் நான்காம் வகுப்பில் சேர்ந்தார்; அங்கு



திரு. வி. க. அவர்கள்

அப்பொழுது நடைபெற்ற கட்டுரைப் போட்டியில் கலந்து கொண்டார்; 'வாழை' என்ற தலைப்பில் அழகியதொரு கட்டுரை எழுதி முதற்பரிசு பெற்றார். நாள்தோறும் எழுதும் பழக்கத்தை மேற்கொண்டு தெளிவாகவும், அழகாகவும் எழுதக் கற்றுக் கொண்

131490

டார். இவருடைய அறிவையும், திறமையையும் கண்ட ஆசிரியர் இவரைச் சட்டாம்பிள்ளையாக நியமித்தார்.

தொடக்க நிலைப் படிப்பைப் படித்து முடித்த இவர் அக் கலாசாலையிலேயே உயர்நிலைப் பள்ளிக் கல்வியையும் பயின்றார். கல்வியிற் சிறந்து விளங்கியமையால் பள்ளிக்கூடச் சம்பளமின்றியே படிக்கும் வாய்ப்பு இவருக்கு ஏற்பட்டது. இவர் ஆசிரியர்களை அணுகித் தமக்கு ஏற்படும் ஐயங்களை அவ்வப் பொழுது நீக்கிக் கொள்வார். யாழ்ப்பாணத்தைச் சார்ந்த கதிரைவேற் பிள்ளை அப்பள்ளியில் தமிழாசிரியராய் இருந்தார். அவர் சைவ சமயத்தைச் சார்ந்தவர். சிறந்த பேச்சாளர்; மாணவர்களுக்குத் தமிழன்பை ஊட்டும் வகையில் பாடம் நடத்தும் இயல்புடையவர். திரு.வி. க. அவரிடம் பேரன்பு கொண்டு நெருங்கிப் பழகினார்; அவருடைய சொற்பொழிவுகளைக் கேட்டுத் தமிழுணர்வும், பேச்சாற்றலும் பெற்றார். எதிர்பாராக் காரணங்கள் சிலவற்றால் பள்ளியிறுதி வகுப்பில் இரண்டாவது முறை படிக்கவேண்டிய நிலை இவருக்கு ஏற்பட்டது. அதனை இவர் விரும்பவில்லை. அதனால் இவருடைய பள்ளிப் படிப்பு இதனுடன் முற்றுப் பெற்றது.

பள்ளிப் படிப்பை முடித்துக்கொண்ட பின் இவருடைய உள்ளம் தமிழ் மொழியின்மீது சென்றது. இலக்கணம், இலக்கியம், தர்க்கம், சாத்திரம் ஆகியவற்றைத் தம் ஆசிரியராகிய கதிரைவேற் பிள்ளையிடம் பாடங் கேட்டார். பெரிய புராணம், தணிகைப் புராணம், திருவிளையாடற் புராணம் ஆகிய புராணங்களையும் அவரிடத்திலேயே பயின்

TB 031(6) N57

ஞர். இந்நிலையில் கதிரைவேற் பிள்ளையவர்கள் கடுஞ்சுரத்தால் பீடிக்கப்பட்டு இயற்கை எய்தினர். அதன் பின் திரு. வி. கலியாண சுந்தரனர் யாழ்ப் பாணம் சுவாமிநாத பண்டிதர், சபாபதி நாவலர் ஆகி யோரிடம் பாடம் கேட்டுத் தம் அறிவை வளர்த்துக் கொண்டார். தமக்கு ஏற்படும் ஐயங்களை மறைமலை யடிகளாரிடத்தில் கேட்பதும் உண்டு. அடிகளாரும் அவ்வப்போது இவருடைய ஐயங்களை நீக்கி வந் தார். வடமொழி, ஆங்கிலம், அரபு முதலிய மொழி களில் வல்லவராய் விளங்கிய பலரை இவர் அணுகி அம்மொழி நூல்களைப் பற்றிய செய்திகளையும் அறிந்துகொண்டார்.

தந்தையார் இறந்தமையால் இவருடைய குடும் பம் வறுமைக்குள்ளாகியது. குடும்பத்தைக் காப் பாற்ற வேண்டுமென்ற எண்ணம் இவருக்கு ஏற்பட் டது. பல்வேறு இடங்களுக்குச் சென்று வேலை தேடினர்; வேலை கிடைக்கப் பெருமையால் பெரிதும் வருந்தினர். பிறகு ஸ்பென்சர் கம்பெனியில் வேலை கிடைத்தது. இவர் அங்குச் சில மாதங்கள் வேலை செய்து வந்தார். இச்சமயத்தில் ஆங்கிலேயரால் வங்காள மாநிலம் இரு துண்டுகளாகப் பிரிக்கப்பட் டது. அதன் காரணமாக அரசியல் கிளர்ச்சி நாடெங் கும் ஏற்பட்டது. இத்தகைய கிளர்ச்சிகளில் மனத் தைச் செலுத்திய திரு. வி. க. தம் வேலையைவிட்டுப் பொது வாழ்வில் ஈடுபட்டார்.

இவர் பொது வாழ்வில் ஈடுபட்டுக் காங்கிரசு இயக்கம் தென்னட்டில் வளர்ச்சியடைய அரும்பாடு பட்டார். காந்தியடிகளின் கொள்கைகளைப் பின்

பற்றி அறப் புரட்சிகள் பலவற்றில் கலந்து கொண்டார்; தொழிலாளர்களின் நலனைக் கருதித் தொழிற் சங்கம் ஒன்றையும் தோற்றுவித்தார்; அல்லும்பகலும் அயராது தொழிலாளர் நலனுக்காகப் பாடுபட்டார். **தேசபக்தன், நவசக்தி** ஆகிய செய்தித் தாள்களின் ஆசிரியராக இருந்து தமிழுக்கும், நாட்டிற்கும் இவர் செய்த பணிகள் மிகப் பலவாகும்.

திரு. வி. க. எளிய வாழ்க்கையை நடத்தினார்; ஒழுக்கத்தின் இருப்பிடமாய் விளங்கினார்; சத்தியத்தின் உறைவிடமாய் வாழ்ந்தார்; சமரச மனப்பான்மையை வளர்த்தார்; பெண்மையைப் போற்றினார்; மாணவர்களின் நண்பராயிருந்து அவர்களுக்கு வேண்டிய அறிவுரைகளை வழங்கினார். இவரைத் தமிழ் நாட்டுக் காந்தியடிகள் என்றும் கூறலாம். வாழ்க திரு. வி. க. அவர்களின் பெயர்! வளர்க அவர் பணி!

தோற்றம்: 26-8-1883. மறைவு: 17-9-1953.

## அருஞ்சொற்பொருள்

பொதியம் - பொதியமலை. தமிழ் முனிவன் - அகத்தியன். புள் ஆட்டம் - கிட்டிப்புள் ஆட்டம். நெஞ்சுரம் - மனவுறுதி. சட்டாம்பிள்ளை - வகுப்புத் தலைவன்.

## கேள்விகள்

1. தென்றல் செய்யும் நன்மைகள் யாவை ?
2. திரு. வி. க. அவர்களைத் தமிழ்த் தென்றல் என்று ஏன் கூறுகின்றோம் ?
3. திரு. வி. க. அவர்களின் பெற்றோர்கள் யாவர் ?
4. இளமையில் அவர் விளையாடிய விளையாட்டுக்கள் யாவை ?

5. எந்தப் பள்ளியில் அவர் முதன் முதல் சேர்ந்தார்? அப்பொழுது அவருக்கு வயது எத்தனை?
6. திரு. வி. க. எதற்காக முதற் பரிசு பெற்றார்? எப்போது?
7. கதிரைவேற் பிள்ளையிடம் அவர் பாடங் கேட்ட நூல்கள் யாவை?
8. திரு. வி. க. அவர்களின் பள்ளிப் படிப்பு ஏன் இடையிலேயே முற்றுப் பெற்றது?
9. அவருக்கு ஆசிரியராயிருந்த பெருமக்கள் யாவர்?
10. அவர் வேலையிலிருந்து .விலகியதற்குக் காரணம் யாது?
11. திரு. வி. க. செய்த பொதுப் பணிகள் யாவை?

## இலக்கணம்

(.) இது முற்றுப்புள்ளி. வாக்கியம் முடிந்த இடத்தில் இப்புள்ளியை இடவேண்டும்.

(;) இஃது அரைப்புள்ளி. ஒரே எழுவாய் பல பயனிலைகளைக் கொண்டு முடியும் தொடர் வாக்கியத்தில் பயனிலைகளுக்குப் பின் இதனை இட வேண்டும்.

(,) இது காற் புள்ளி. பெயர்ச் சொற்கள் பல தொடர்ந்து வரும்போது, நீண்ட வாக்கியங்களில் உள்ள வினையெச்சங்களை அடுத்து இப்புள்ளியை இடவேண்டும்.

(?) இது வினாக்குறி. வினா வாக்கியங்களின் இறுதியில் இதனை இடவேண்டும்.

(!) இஃது உணர்ச்சிக்குறி. இரக்கம், வியப்பு, விளி ஆகிய இடங்களில் இக்குறி இடவேண்டும்.

# ஔவை தூது

## (நாடகம்)

### காட்சி—1

**இடம்:** தகடூர் அரண்மனை.

**காலம்:** பகல்.

**உறுப்பினர்:** அதியமான், ஔவையார்.

[அரண்மனையில் விருந்துண்டபின் ஔவையாரும், அதியமான் நெடுமான் அஞ்சியும் தனித்துப் பேசுதல்]

**அதியன்:** அறிவில் சிறந்த பெருமாட்டியே, என்னென்று சொல்வேன்! தொண்டைமான் இவ்வாறு மனம் மாறுதலடைவான் என்று நான் எண்ணவேயில்லை. என்ன திமிர்! எவ்வளவு இறுமாப்பு! என்னைப் போருக்கு அழைக்கின்றனே! அழைக்கட்டும். அவன் இறுமாப்பை அடக்குகின்றேன்.

**ஔவை:** அதியனே, வீணிற் சினங் கொள்வதிற் பயன் என்ன? தொண்டைமான் இளைஞன்; அண்மையில் அரியணை ஏறியவன். தன்னைப் பெருவீரன் என்று எண்ணி இறுமாந்திருக்கின்றன்! அனுபவம் இல்லாத சிறுவன். போரிடுவதினின்று அவனைத் தடை செய்ய முடியாதோ!

**அதியன் :** அன்னையினும் சிறந்த அம்மையே, அவனுக்கு நான் எவ்வளவு உதவி செய்திருக்கின்றேன் தெரியுமா! யானைகள் வேண்டுமென்ருன். கொடுத்து உதவினேன். சந்தன மரம் பேரளவில் வேண்டினுன். அவன் விரும்பிய அளவு கொடுத்தேன். என்னுடன் நட்புகொண்டான்; பாராட்டினேன்; என் நாட்டுக்கு வந்து என் விருந்தினனுயிருந்தான். உபசரித்தேன்; அளவளாவினேன்...

**ஔவை:** இத்தகையவன் போருக்கு அழைக்குமாறு துணிந்தது எப்படி?

**அதியன்:** ஏன் துணியமாட்டான்? பொருமை அவனைத் துணியச் செய்தது! எம் நாட்டு வளமும் செல்வப் பெருக்கும் அவனைப் போரிடத்தூண்டியுள்ளன. என்னைப் போருக்கு அழைத்து வெற்றி பெற்ருல், இந்த நாட்டையும் இதன் செல்வத்தையும் தானே அடையலாம் அல்லவா?

**ஔவை :** தொண்டைமான் அவ்வளவு இழிகுணம் படைத்தவனு ?

**அதியன் :** அவன் போக்கிலிருந்து இது விளக்கமாகத் தெரியவில்லையா? அன்னையே, உண்ட வீட்டுக்கு இரண்டகம் செய்யும் சண்டாளன்; அன்னமிட்ட வீட்டில் கன்னமிடும் கயவன். அவன் விரும்பியவாறு போர் தொடுக்கட்டும். அவனையும் அவன் வீரரையும் வீழ்த்தி, மண்டைகள் மண்ணில் உருளச் செய்கிறேன். முண்

டங்களை நாட்டியமாட வைக்கிறேன். அவன் தலைநகரைத் தரைமட்டமாக்குகிறேன்.

ஔவை : அதிய, பதருதே. உன் வீரத்திற்கு முன் அவன் விட்டில் பூச்சி. பொறுமை பொலிவளிக்கும். பதருத காரியம் சிதருது. ஆழ்ந்து சிந்தித்த பின் செயலாற்றுவதே நல்லது. 'எண்ணித் துணிக கருமம்' என்னும் மறைமொழி நீ அறியாததோ !

அதியன் : நானு பதறுகிறேன்? போருக்குத் துடித்துக் கொண்டிருப்பவன் நானு?

ஔவை : வீரர் தலைவ, நீ போருக்குத் துடிக்கிருய் என்று நான் கூறவில்லை. இந்தப் போர் எவ்வகையிலும் நடைபெறக் கூடாது என்பதே என் கருத்து.

அதியன் : அம்மையீர், அதற்கு நானென்ன செய்வது ? அவன் படையெடுத்து வந்தால் நான் அடிபணிய வேண்டுமா ?

ஔவை : அதிய, வேண்டாம். வீரனுகிய நீ அவ்வாறு செய்தல் அழகா ? அவ்வாறு செய்யுமாறு நான் கூறுவேனு? நான் தொண்டைமானிடம் தூது செல்கின்றேன். அவனிடம் பேசி இந்தப் பெரும் போரை நிறுத்துகிறேன். நீ எனக்கு விடை கொடு.

அதியன் : அன்னையே, தொண்டைமான் ஓர் அறிவிலி ; செய்ந்நன்றி கொன்றவன் ; வஞ்சகன். தங்களை எதிர்கொண்டு வரவேற்பானே என்று ஐயுறுகின்றேன். எனினும், தங்கள் விருப்

பத்தை நான் தடை செய்யவில்லை. போய் வாருங்கள்.

[ஔவை அதியனிடம் விடைபெற்றுத் தொண்டை நாடு நோக்கிச் செல்கிருள்.]

## காட்சி—2

இடம் : காஞ்சீபுரத்தில் தொண்டைமான் அரண்மனை.

காலம் : முற்பகல்.

உறுப்பினர் : தொண்டைமான், அரசி, ஔவை, காவலர்.

[ஔவை களைத்துத் தடியூன்றி மெல்ல நடந்து வருகிருர். தொண்டைமான், தளர்ந்து நடந்துவரும் அவரைக் கண்டதும் ஓடோடிச் சென்று எதிர்கொண்டு வரவேற்கிருன்.]

தொ : புலவர்க்கரசியே, வருக! எருக!! தங்களுக்கு நல்வரவு கூறுகின்றேன்.

ஔவை : தொண்டையர் கோனே, வாழ்க. நின் குலமும், ஆட்சியும் சிறந்த புகழுடன் பொலியுமாக!

தொ : பெருமாட்டியே, தாங்கள் மிகவும் களைத்துள்ளீர்கள். நெடுந் தொலைவிலிருந்து நடந்து வருகிறீர்கள் போலும்! தாங்கள் முதலில் குளித்து வாருங்கள். உணவுண்டபின் பேசுவோம்.

(காவலன் ஒருவனை அழைத்து)

காவல, இப்பெருமாட்டியாரை அந்தப்புரத்திற்கு அழைத்துச் செல்.

[ஔவையார் குளித்து வேறுடை தரித்த பின், தொண்டைமானும், ஔவையும், அரசியும் ஒன்ருக அமர்ந்து உணவுண்கின்றனர்.]

**தொ :** அன்னையே, தங்கள் வருகை என்னைப் பெரு மைப்படுத்தி விட்டது. எவ்வாறேனும் தங்களை அழைத்துத் தங்களுடைய கவிகளாம் நறுமண மலர்களின் இன்பத்தைத் துய்த்து மகிழவேண் டும் என்னும் பேரவாக் கொண்டிருந்தேன். நான் எதிர்பாராவாறு தாங்களே இங்கு வந்து விட்டது என்னுடைய நல்வாய்ப்பேயாகும்.

**ஔவை :** அரசர் ஏறே, உன் அன்புக்கு என் நன்றி. நம் செந்தமிழில் நீ கொண்டுள்ள பற்றினை நானறிவேன். உன்ஞல், நம் தமிழகம் கல்வி யிலும் வீரத்திலும் தலை சிறந்து பெரும்புகழ் அடையும் என்பதில் எனக்கு ஐயமில்லை.

**தொ :** புலவர் தலைவியே, நன்றி. பேசிக்கொண்டே சென்று என் படைக்கலக் கொட்டிலைக் காண் போமா ?

**ஔவை :** வீரர் வீர, அப்படியே செய்வோம்.

[இருவரும் பேசிக்கொண்டே படைக்கலக் கொட் டிலை அடைகின்றனர். தொண்டைமான் அங்குள்ள வற்றை ஔவையாருக்குக் காட்டிய வண்ணம் செல் கின்ருன்.]

**தொ :** அன்னையே, பார்த்தீர்களா ? இந்த ஈட்டி களை ! அதோ பாருங்கள் சிறந்த வாள் வகை கள். இந்த வேற் கருவிகள் மிகச் சிறந்தவை.

**ஔவை :** ஆம் : ஆம். எல்லாம் மிகச் சிறந்தவை களாகவே இருக்கின்றன. அனைத்தும் புத்தம்

புதியவை. நெய் பூசி, காம்புகள் திருத்தி, பீலி சூட்டிப் பார்வைக்கு மிகமிக அழகாக அடுக்கப் பட்டுள்ளன. ஆனால் நான் அதியனிடத்தில் இவ்வாறு அழகாகக் காணமுடியவில்லை. ஈட்டி களும், வேல்களும், வாள்களும் முனை வளைந் தும், விரிந்தும், உடைந்தும், கூர்மழுங்கியும் கொல்லன் உலைக்களத்தில் கிடக்கின்றன. காம் புகள் முறிந்து புதிய காம்புகள் செருகப்பட்டுக் கிடக்கின்றன. பெரும்பாலும் இவை அவன் படைக் கொட்டிலில் இருப்பதில்லை. வீரர்கள் கையில் இருக்கும் ; இல்லையெனின் கொல்லன் உலையில் கிடக்கும்.

தொ : அன்னாய், தங்கள் கூற்று புகழ்வது போல் இகழ்வதாயிருக்கின்றதே! நான் போர்ப் பயிற்சி இல்லாதவன் என்றும், அதியன் மிகுந்த போர்ப் பயிற்சி உடையவன் என்றும், அவன் வீரர்கள் எப்போதும் போர்க் கருவிகளுடன் பயில்பவர் என்றும், என் வீரர்கள் போர்க் கருவிகளை அலங்காரமாக அடுக்கி வைத்து விட்டு உல்லாசமாக இருப்பவர் என்றும் கூறுவ தாக அன்றோ இருக்கிறது தங்கள் கூற்று !

ஔவை : வீரர்க்கரசே, ஆம் ; அதியன் போர்ப் பயிற்சி மிக்கவன் என்பதை உலகறியும். நீ அவனுடன் போர் தொடுக்க முயல்வதாகவும் கேள்வியுற்றேன். நீயும் வீரன். அவனும் வீரன். நீங்கள் இருவரும் எனக்கு வேண்டியவர்கள். வீரர்களாகிய நீங்களிருவரும் போர் தொடுப்ப தால் இருதரப்பிலும் குற்றமற்ற மக்கள் பலர் மாளுவர். போரினால் உண்டாகும் தொல்லை

களைப் போரில் ஈடுபடாத குடிமக்களும் ஏற்றுத் துன்பமடைய நேரிடுமல்லவா? உங்கள் இரு வர்க்குமிடையே உள்ள பகைமைக்கு மற்றவர் கள் பலியாகி மாளவேண்டுமா? போரில் உங் களுள் ஒருவர் தோற்பது உறுதி. அதனுல் உங்கள் பெருமை உயரப் போவதில்லை.

தொ: அன்னையே, அப்படியானுல் உங்கள் கருத்து என்ன?

ஔவை: போரே வேண்டாம். இருவரும் பகைமை நீங்கி முன்போல் நல்ல நண்பர்களாக விளங்க வேண்டும் என்பதே என் கருத்து.

தொ: (ஆழ்ந்து சிந்தித்து) புலவர் போற்றும் புலமைசால் கலைவாணி, தங்கள் விருப்பத்தை மீறிச் செயலாற்ற நான் விரும்பவில்லை. தங்கள் கருத்துப்படியே ஆகட்டும். நான் அதியனுடன் போர் தொடுப்பதில்லை. இது உறுதி.

ஔவை: மகிழ்ச்சி. பெருமகிழ்ச்சி. என் உயிரனைய வீர மைந்தர்களே, நீயும் அதியனும் ஆற்று மணலினும் பல நாட்கள் புகழ் பெருக வாழ்வீர் களாக.

(ஔவையார் அதியனை வரவழைத்து அவனையும் தொண்டைமானையும் மீண்டும் நண்பர்களாக்கி வைக் கிருர்.)

## அருஞ்சொற்பொருள்

சினம் - கோபம், அண்மையில் - சமீபத்தில். அரியணை - அரசர் உட்காரும் ஆசனம். இரண்டகம் - துரோகம். சண்டாளன் - இழிகுணம் படைத்தவன். கன்னமிடும் - கன்னக் கோலால் சுவரைத் துளைத்துத் திருடும்.

கயவன் - கீழ்மகன். பொலிவு - அழகு; சிறப்பு. எண்ணி - ஆராய்ந்து. படைக்கலக் கொட்டில் - போர்க் கருவிகள் வைத்துள்ள இடம். பீலி - மயிலிறகு.

### கேள்விகள்

1. தொண்டைமானைப் பற்றி அதியன் கருத்து யாது?
2. ஔவை, சினங் கொண்ட அதியனை எவ்வாறு அமைதி பெறச் செய்தார்?
3. அதியன் தொண்டைமானுக்குச் செய்த உதவி கள் யாவை?
4. தொண்டைமான் அதியனுடன் போர் தொடுக்க முயன்றதற்கு அதியன் கூறிய காரணங்கள் யாவை?
5. அதியனிடம் தம் கருத்தென ஔவை கூறியது யாது?
6. "நான் அடிபணிய வேண்டுமா?" என்று கேட்ட அதியனிடம் ஔவை கூறியவை யாவை?
7. தொண்டைமான் ஔவையை எவ்வாறு வரவேற்றான்? என்ன கூறிப் பாராட்டினான்?
8. தொண்டைமான் படைக்கலக் கொட்டிலைக் கண்ட ஔவை என்ன கூறினார்?
9. தொண்டைமான் ஔவை கூற்றுக்கு விடையாக என்ன கூறினான்?
10. போர் நடைபெறக் கூடாதென்பதற்கு ஔவை கூறிய காரணங்கள் யாவை?

### பயிற்சி

1. இந் நாடகத்தை நடித்துக் காட்டுக.
2. இதனை ஔவையாரே கூறும் ஒரு சிறு கதை போல் வரைக.
3. ஔவையார், அதியனையும் தொண்டைமானை யும் நண்பர்களாக்கி வைக்கும் நிகழ்ச்சியை ஒரே காட்சி நாடகமாக எழுத முயற்சி செய்க.

# செய்யுட் பகுதி

## I. வாழ்த்து

### 1. கடவுள் வாழ்த்து

மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே
ஈசன் எந்தை இணையடி நீழலே.

—திருநாவுக்கரசர்

அருமறை முதல்வனை ஆழி மாயனைக்
கருமுகில் வண்ணனைக் கமலக் கண்ணனைத்
திருமகள் தலைவனைத் தேவ தேவனை
இருபத முளரிகள் இறைஞ்சி ஏத்துவாம்.

—வில்லிபுத்தூராழ்வார்

### 2. நாட்டு வாழ்த்து

எந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவி
இருந்ததும் இந்நாடே—அதன்
முந்தையர் ஆயிரம் ஆண்டுகள் வாழ்ந்து
முடிந்ததும் இந்நாடே—அவர்
சிந்தையில் ஆயிரம் எண்ணம் வளர்ந்து
சிறந்ததும் இந்நாடே—இதை
வந்தனை கூறி மனத்தி லிருத்திஎன்
வாயுற வாழ்த்தேனோ ?

—பாரதியார்

## குறிப்புரை

**திருநாவுக்கரசர் :** சைவ சமய குரவர் நால்வரில் இவர் ஒருவர். இவருடைய இயற்பெயர் மருள் நீக்கியார். ஊர் - திருவாமூர். பெற்றோர் - புகழனார், மாதினியார். தமக்கை - திலகவதி. இவர் கி. பி, 7-ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் வாழ்ந்தவர். இறைவனால் நாவுக்கரசர் என்ற பெயர் அளிக்கப்பட்ட தென்பர். வேறு பெயர்கள்— அப்பர், வாகீசர்.

அருஞ்சொற்பொருள் : மாசு - குற்றம். மதியம் - திங்கள். வீங்கு - சிறப்பு மிகுந்த, மூசு - மொய்த்தல், அறை - ஒலிக்கும். பொய்கை - குளம். இணையடி - இரு திருவடிகள். நீழல் - நிழல்.

**வில்லிபுத்தூராழ்வார் :** இவர் திருமுனைப்பாடி நாட்டில் சனியூரில் 500 ஆண்டுகட்கு முன் வாழ்ந்தவர். மதம் - வைணவம். குலம் - வேதியர். தந்தை - வீரராகவன். ஆதரித்தவன் - வரபதியாட் கொண்டான். மகன் - வரந் தருவார்.

அருஞ்சொற்பொருள் : மறை - வேதம். ஆழி - சக்கரம்; கடல். மாயன் - மாயச் செயல் செய்பவன்; கண்ணன். முகில் - மேகம். கமலம் - தாமரை. தேவதேவன் - தேவர் கட்குத் தலைவன். முளரி - தாமரை. இறைஞ்சி - வணங்கி.

**பாரதியார் :** இவர் எட்டையபுரத்தில் பிறந்தவர். பெற்றோர் - சின்னசாமி, இலக்குமி. குலம் - வேதியர். பிறப்பு - 1882. இறப்பு - 11-9-1921. எழுதிய நூற்கள் - பாப்பா பாட்டு, கண்ணன் பாட்டு, குயில் பாட்டு, பாஞ் சாலி சபதம், ஞானரதம், நாட்டுப் பாடல் முதலியன.

அருஞ்சொற்பொருள் : முந்தையர் - முன்னோர். சிந்தை - உள்ளம். எண்ணம் - கருத்து. வந்தனை - வழி படு மொழிகள். வாயுற - வாய் நிறைய.

## கேள்விகள்

1. இறைவன் திருவடிகளின் சிறப்பினை நாவுக்கரசர் எங்ஙனம் கூறியுள்ளார் ?
2. திருமாலின் இயல்புகள் யாவை ?
3. தாய்நாட்டின் சிறப்பினைப் பாரதியார் எவ்வாறு பாராட்டியுள்ளார் ?
4. இணையடி, கருமுகில், முளரி, இறைஞ்சி, எந்தை, வாயுற—இவற்றுக்குப் பொருள் எழுதுக.
5. திருநாவுக்கரசர், வில்லிபுத்தூராழ்வார், பாரதியார்—இவர்களைப்பற்றிக் குறிப்பு வரைக.

# II. இயற்கை அழகு

## 1. அழகிய மயில்

அழகிய மயிலே! அழகிய மயிலே!
அஞ்சுகம் கொஞ்ச, அமுத கீதம்
கருங்குயி லிருந்து விருந்து செய்யக்,
கடிமலர் வண்டுகள் நெடிது பாடத்,
தென்றல் உலவச், சிலிர்க்கும் சோலையில்
அடியெடுத் தூன்றி அங்கம் புளகித்
தாடு கின்றாய் அழகிய மயிலே!

—பாரதிதாசன்

## 2. கடல்

எல்லை அறியாப் பெருங்கடலே—நீதான்
இரவும் உறங்காயோ கடலே
அல்லும் பகலும் அலைகடலே—உனக்(கு)
அலுப்பும் இலையோ கருங்கடலே!
பொங்கும் திரைகளோ கடலே—அவை
புரவி நிரைதாமோ கடலே
எங்கும் உனதொலியோ கடலே—அன்றி
இடியின் முழக்கமோ கடலே!

—கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை

### குறிப்புரை

**பாரதிதாசன் :** இவர் புதுச்சேரியில் வாழ்பவர். தந்தை-கனகசபை. பிறப்பு - 29-4-1881. இயற்பெயர் - சுப்பு ரத்தினம். பாரதியாரிடம் கொண்ட அன்பு காரணமாகப் பாரதிதாசன் என்று புனைபெயர் கொண்டவர். இயற்

றிய நூல்கள் - பாண்டியன் பரிசு, அழகின் சிரிப்பு, குடும்ப விளக்கு, தமிழச்சியின் கத்தி முதலியனவாகும்.

அருஞ்சொற்பொருள் : அஞ்சுகம்-கிளி. அமுத கீதம் - இனிய பாடல். கடி மலர் - வாசனையுள்ள மலர். நெடிது - நெடுநேரம். சிலிர்க்கும்-(குளிர்ச்சியால்) சிலிர்ப் படையும். அங்கம் - உடல். புளகித்து-மகிழ்ந்து.

**கவிமணி :** இவர் நாஞ்சில் நாட்டுத் தேரூரில் பிறந்த வர். பெற்றோர் - சிவதாணுப்பிள்ளை, ஆதிலட்சுமி. குலம் - வேளாளர். பிறப்பு - 1876. இறப்பு - 1954. இயற்றிய நூற்கள் - மலரும் மாலையும், ஆசிய சோதி, மருமக்கள் வழி மான்மியம் முதலியன.

## அருஞ்சொற்பொருள்

அல்லும்-இரவும். அலுப்பு-சோர்வு. திரை-அலை. முழக்கம்-பேரொலி. புரவி-குதிரை. நிரை-வரிசை.

## கேள்விகள்

1, சோலையில் மயிலாடுங் காட்சி எவ்வாறு வருணிக் கப்பட்டுள்ளது ?

2. கடலில் அலைகள் வருங்காட்சியை ஆசிரியர் எவ்வாறு வருணித்துள்ளார் ?

3. கடலை ஆசிரியர் எவ்வாறு வருணித்துள்ளார் ?

4. பாரதிதாசன், தேசிகவிநாயகம் பிள்ளை ஆகிய வரின் வரலாற்றுக் குறிப்பு வரைக.

5. பொருள் கூறுக : கடிமலர், புளகித்து, அல்லும், திரை, புரவி.

# III. அறவுரை

## 1. நன்னெறி

### 1. நட்பிற் பிரியாமை

நீக்கமறும் இருவர் நீங்கிப் புணர்ந்தாலும்
நோக்கி னவர்பெருமை நொய்தாகும்;—பூக்குழலாய்!
நெல்லின் உமிசிறிது நீங்கிப் பழமைபோற்
புல்லினுந் திண்மைநிலை போம்.

### 2. தன்னலங் கருதாமை

தங்குறைதீர் வுள்ளார் தளர்ந்து பிறர்க்குறூஉம்
வெங்குறைதீர்க் கிற்பார் விழுமியோர்;—திங்கள்
கறையிருளை நீக்கக் கருதா துலகில்
நிறையிருளை நீக்குமே னின்று.

### 3. பிறப்பால் உயர்வு தாழ்வு இல்லை

ஆக்கும் அறிவா னல்து பிறப்பினுன்
மீக்கொள் உயர்விழிவு வேண்டற்க;—நீக்கு
பவரார் அரவின் பருமணிகண் டென்றுங்
கவரார் கடலின் கடு.

### 4. தக்கார் தொடர்பு நலம் பெருக்கும்

நல்லார் செயுங்கேண்மை நாடோறும் நன்ருகும்;
அல்லார் செயுங்கேண்மை யாகாதே;-நல்லாய்கேள்!
காய்முற்றின் தின்தீங் கனியாம்; இளந்தளிர்நாள்
போய்முற்றின் என்னுகிப் போம்!

—சிவப்பிரகாசர்

## குறிப்புரை

சிவப்பிரகாசர்:—தந்தை - குமாரசாமி தேசிகர். ஊர்-காஞ்சிபுரம். காலம் - சுமார் 280 ஆண்டுகளுக்குமுன். மதம் - வீரசைவம். ஆதரித்தவர் - அண்ணாமலை ரெட்டியார். இயற்றிய நூற்கள் - நால்வர் நான்மணிமாலை, திருவெங்கைக் கலம்பகம், திருவெங்கைக் கோவை முதலியன.

## அருஞ்சொற்பொருள்

(1) குழலாய்-கூந்தலை யுடையவளே. நீக்கம்-பிரிவு. நொய்து-அற்பம். புல்லினும் - கூடினும்; புணர்ந்தாலும் - சேர்ந்தாலும். திண்மை-வலிமை.

(2) திங்கள் - மதி. விழுமியோர் - மேலோர். உள்ளார்-நினையாதவராய். தீர்க்கிற்பார்-நீக்குவார்.

(3) அரவின்-பாம்பின். பருமணி-பருத்த மாணிக்கம். மீக்கொள் - மேலாகக் கொள்கின்ற. ஆக்கும் - நற்குணங்களை உண்டாக்கும். கடு-நஞ்சு. கவரார்-கொள்ளார். வேண்டற்க-விரும்பாதிருப்பீர்.

(4) நல்லாய்-நற்குணமுடையவளே. தீங்கனி-இனிய பழம். இளந்தளிர் - கொழுந்து. கேண்மை-நட்பு. நன்று ஆகும்-நன்றாகி வளரும். அல்லார்-தீயவர்.

## கேள்விகள்

1. நட்பிற் பிரிதல் இழிவு தரும் என்பதை நன்னெறி ஆசிரியர் எவ்வாறு விளக்குகின்றார் ?
2. திங்களின் செயல் யாது ? அதனால் விளக்கப்படுவது யாது ?
3. எவற்றால் உயர்வு தாழ்வு கொள்ளல் வேண்டும் ? எவற்றால் கொள்ளலாகாது ?
4. நல்லார் நட்பிற்குக் காட்டப்படும் உவமை யாது ? அவற்றால் நாம் அறிவது என்ன ?

## 2. நீதிநெறி விளக்கம்

### 1. அவையஞ்சுவார் கல்வி

அவையஞ்சி மெய்விதிர்ப்பார் கல்வியும் கல்லார்
அவையஞ்சா ஆகுலச் சொல்லும்—நவையஞ்சி
ஈத்துண்ணர் செல்வமும் நல்கூர்ந்தார் இன்னலமும்
பூத்தலிற் பூவாமை நன்று.

### 2. நன்மதிப்புப் பெறும் வழி

பிறரால் பெருஞ்சுட்டு வேண்டுவான் யாண்டும்
மறவாமே நோற்பதொான் றுண்டு;—பிறர்பிறர்
சீரெல்லாந் தூற்றிச் சிறுமை புறங்காத்து
யார்யார்க்குந் தாழ்ச்சி சொலல்.

### 3. கருமமே கண்ணயினர் செயல்

மெய்வருத்தம் பாரார் பசிநோக்கார் கண்துஞ்சார்
எவ்வெவர் தீமையும் மேற்கொள்ளார்—செவ்வி
அருமையும் பாரார் அவமதிப்புங் கொள்ளார்
கருமமே கண்ணயி னர்.

### 4. நல்லநெறி

பொய்குறளை வன்சொல் பயனிலவென் றிந்நான்கும்
எய்தாமை சொல்லின் வழுக்காத்து—மெய்யிற்
புலமைந்துங் காத்து மனமாசு அகற்றும்
நலமன்றே நல்லாறு எனல்.

—குமர குருபர அடிகள்

### குறிப்புரை

குமர குருபரர் : இவர் பாண்டிய நாட்டு ஸ்ரீவைகுண்டத்தில் பிறந்தவர். குலம் - வேளாளர். பெற்ரோர் - சண்முக சிகாமணிக் கவிராயர்; சிவகாமி அம்மை. இவர் 5

வயது வரை பேசாதிருந்து திருச்செந்தூர் முருகன் அருளால் பேசும் திறம் பெற்ருர் என்பர். இவர் இயற்றிய வேறு நூற்கள் - கந்தர் கலிவெண்பா, மீனுட்சியம்மை பிள்ளைத் தமிழ், மீனுட்சியம்மை குறம், மதுரைக் கலம்பகம் முதலியன.

## அருஞ்சொற்பொருள்

(1) அவை-சபை. விதிர்ப்பார்-நடுங்குவார். ஆகுலம்-ஆரவாரம். நவை-குற்றம். ஈத்துண்ணுதவர்-கொடுத்துண்ணுதவர். நல்கூர்ந்தார்-வறியர். பூத்தல்-உண்டாதல். பூவாமை-உண்டாகாமை.

(2) பெருஞ்சுட்டு - பெருமதிப்பு. யாண்டும் - எப்போதும். நோற்பது - செய்யத்தக்கது. சீர் - பெருமை. தூற்றி - பரப்பி. சிறுமை - தீயவொழுக்கம். புறம்காத்து-வெளியே பரப்பாமல் காத்து. தாழ்ச்சி - பணிவான மொழி.

(3) துஞ்சார்-உறங்கார். மேற்கொள்ளார் - பொருட்படுத்தார். கண்ணுயினுர்-கருத்துக்கொண்டவர்.

(4) குறளை - புறங்கூறல். எய்தாமை-வராமல். வழுகாத்து-குற்றம் நீங்கி. புலமைந்து-மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகிய ஐந்து. காத்து-அடக்கி. அகற்றும் - நீக்கும். நலம்-நற்செயல்.

## கேள்விகள்

1. எவை பூத்தலில் பூவாமை நன்று ?
2. நன்மதிப்பு பெறச் செய்ய வேண்டுவன யாவை ?
3. கருமமே கண்ணுயினுர் செயல்கள் யாவை ?
4. நன்மையளிக்கும் நல்வழிகள் யாவை ?

## 3. நீதிவெண்பா

### 1. துட்டனைக் கண்டால் தொலைவில் விலகு

கொம்புளதற் கைந்து குதிரைக்குப் பத்துமுழம்
வெம்புகரிக் காயிரந்தான் வேண்டுமே—வம்புசெறி
தீங்கினர்தங் கண்ணில் தெரியாத தூரத்து
நீங்குவதே நல்ல நெறி.

### 2. உருவங் கண்டு எள்ளாதே

கற்பூரம் போலக் கடலுப் பிருந்தாலும்
கற்பூர மாமோ கடலுப்பு—பொற்பூரும்
புண்ணியரைப் போல இருந்தாலும் புல்லியர்தாம்
புண்ணியரா வாரோ புகல்.

### 3. பொருளைப் பயன்படுத்தும் முறை

தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்க லென்றிவரோ(டு)
இன்புறத்தா னுண்ட லினிதாமே—அன்புறவே
தக்கவரை யின்றித் தனித்துண்டல் தான்கவர்மீன்
கொக்கருந்த லென்றே குறி.

### 4. கற்றவர் கூட்டுறவின் இன்றியமையாமை

கல்லார் பலர்கூடிக் காதலித்து வாழினும்நூல்
வல்லா னொருவனையே மானுவரோ !—அல்லாரும்
எண்ணிலா வான்மீ னிலகிடினும் வானகத்தோர்
வெண்ணிலா வாமோ விளம்பு.

---

இதன் ஆசிரியர் இன்னாரென்று தெரியவில்லை.

## அருஞ்சொற்பொருள்

(1) கொம்புளது - ஆடுமாடுகள் முதலியன. வெம்பு - சினம் மிகுந்த. கரி-யானை, வம்பு-தீமைகள். செறி - மிகுந்த. நெறி-வழி.

(2) புல்லியர் - தீவினையாளர், பொற்பு - அழகு. ஊரும் - மிகுகின்ற. புண்ணியர் - நற்செயல் புரிபவர். புகல் - கூறு.

(3) தென்புலத்தார் - அழகிய அறிவினையுடைய வர்; தென்புலத்துத் தேவர். ஒக்கல் - சுற்றம். இன்புற - இன்பம் மிகும்படி. தக்கவர் சேர்ந்து உண்ணத் தகுந் தவர். கவர்மீன் - கவர்ந்த மீனை. அருந்தல்-தின்னுதல். குறி-எண்ணுக.

(4) காதலித்து - விரும்பி. நூல் வல்லான் - கல்வி யில் வல்ல அறிஞன், மானுவரோ - ஒப்பாவரோ. வான கத்து - வானத்தில். அல் ஆரும் - இரவில் நிறையும். இலகிடினும்-விளங்கினாலும். விளம்பு-சொல்.

## கேள்விகள்

1. எவ்வெவற்றிற்கு எந்த அளவு விலகி நிற்றல் வேண்டும்?
2. "கற்பூரமாமோ கடலுப்பு"—இதனால் விளக்கப் படுவது யாது?
3. யார் யாருடன் சேர்ந்துண்ணல் வேண்டும்?
4. தனித்துண்ணல் எதற்கொப்பான செயலாகும்?
5. கற்றவன் ஒருவனுக்குக் கல்லார் பலர் ஒவ்வார் என்பதை ஆசிரியர் எவ்வாறு விளக்குகின்றார்?

---

# IV. காதை

## புத்தரும் மகனை இழந்த தாயும்

முடமான இளமறியை முதுகி லேந்தி
மூவுலகும் கருணையினுல் வென்றவீரன்
திடமாகப் பலவுயிரு மளிக்குஞ் சோணைத்
தெய்வநதிக் கரைவந்து சேர்ந்தபோது, 1

மானைப் பழித்த விழியுடையாள்—ஒரு
மாமயில் போலும் நடையுடையாள்
தேனைப் பழித்த மொழியுடையாள் பெண்ணின்
தெய்வ மெனத்தகும் சீருடையாள். 2

ஆருகக் கண்ணீர் வடித்துநின்ருள்;—கையில்
ஆண்மக வொன்றையும் ஏந்திநின்ருள்;
தேருத உள்ளமும் தேற்றுவிக்கும்—ஞான
தேசிகன் சேவடி போற்றிநின்ருள். 3

(புத்தர் அவள் வந்த காரியம் யாது என வினவ,
அவள் இறந்த தன் மைந்தனைக் காட்டிக் கூறுதல்)

"சிரித்தமுக மெனமலர்ந்து செழித்தசெடி நடுவே
சிறுமகனும் விளையாடித் திரிந்திடுமவ் வேளை
விரித்தபட மெடுத்தரவொன் றடுத்தொருகை பற்றி
விளங்குமணிக் கடகமென வளைந்து கிடந்ததுவே. 4

சிறுபொழுது சென்றிட என்செல்வ மகனுடலில்
சீதமகப் பரந்துணர்வு தீர்ந்துவிட்ட தையா!
நிறுத்தவிழி ஒருநிலையில் நின்றுவிட்ட தையா!
நீட்டியகால் மடங்காது நிமிர்ந்துவிட்ட தையா!

கண்டாரில் மிக்கவுளக் கனிவுடையர் ஒருவர்
"காரிகையே மலைமீது காவியுடை யணிந்து
முண்டிதமா யலையுமொரு முனிவரடி பணிந்தால்
முடியாத காரியமும் முடியு"மென உரைத்தார். 6

காடு மலையும் கடந்துவந்தேன்;—உன்னைக்
கண்டு துயரெல்லாம் போக்க வந்தேன்
வாடு மலர்ச்செண்டு போல்கிடக்கும்—இந்த
மைந்த னுயிர்எழச் செய்யு மையா!" 7

கன்றெ ழிந்தகா ராவின் கலக்கமொத்து
அன்ற ரற்றி அழுத அரிவையை
என்றும் எங்கணும் எவ்வுயி ருந்தொழ
நன்று கண்டமெய்ஞ் ஞானியும் நோக்கியே, 8

''தாயேநின் மனக்கவலை—ஒழிந்திடத்
தக்கநல் மருந்தளிப்பேன்;
சேயினை எழுப்பிடுவேன்;—விளையாடித்
திரியவும் செய்திடுவேன்; 9

நாவிய கடுகுவேண்டும்;—அதுவுமோர்
நாவுரி தானும்வேண்டும்;
சாவினை அறியாத—வீட்டினில்
தந்ததா யிருக்கவேண்டும். 10

பக்கமாம் பதிகளிலே—சென்றுநீ
பார்த்திது வாங்கிவந்தால்
துக்கமும் அகலுமம்மா—குழந்தையும்
சுகமாக வாழுமம்மா.'' 11

என்றுரைத்த மொழிகேட்டவ் வேழை மார்பில்
ஏந்தியணைத் திடுமகனோ டூரி லெங்கும்
சென்றுகடு கிரந்து வெறுங் கையாளாகித்
திரும்பிமுனி திருவடியைச் சிரமேற்கொண்டு. 12

(தான் சென்ற வீடுகளில், அவரவர் உரைத்தவற்றை அவள் புத்தரிடத்துக் கூறி மனந்தேறி யிருந்தாள். பின்னர், புத்தர் அவளை நோக்கி,)

மங்கைமனத் தெளிவையெலாம் உரைத்த உண்மை
வார்த்தையினா லறிந்தவளை நோக்கி, ''அம்மா
எங்குமிலாப் பொருள்தேடச் சென்று நீயும்
யான்நினைத்த பொருளதனைப் பெற்று வந்தாய். 13

தங்குமிந்த உலகியற்கை மாறா தம்மா!
தனயனை நீஎண்ணி மனம்தளர வேண்டாம்!

அங்கமெலாம் வாயாக அழுதிட் டாலும்
அவனெழுந்து நின்துயரம் அகற்ற லுண்டோ?"
14

## குறிப்புரை

கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை அவர்கள் இயற்றிய **மலரும் மாலையும்** என்னும் பாடல்களின் தொகுப்பில் **ஆசிய ஜோதி** என்னும் பிரிவிலிருந்து எடுக்கப்பட்டது இப்பாடப் பகுதி. இவரது வரலாற்றை இயற்கை அழகு என்னும் பகுதியில் காணவும்.

## அருஞ்சொற்பொருள்

1. இளமறி - ஆட்டுக்குட்டி. அளிக்கும் - நீர் அளித்து தவும்.

2. விழி - கண். தேனைப்பழித்த மொழி - இனிய மொழி. சீர் - அழகு.

3. தேருத - தேறுதலடையாத. ஞானதேசிகன் - புத்தபெருமான்.

4. மணிக்கடகம் - இரத்தினத்தால் செய்த கடகம்.

5. சீதம் - குளிர்ச்சி. உணர்வு தீர்ந்துவிட்டது - உணர்ச்சி இல்லாமற் போயிற்று.

6. உளக்கனிவுடையார் - மனத்தில் அன்பு மிக உடையவர். காரிகை - பெண். முண்டிதம் - மொட்டைத்தலை.

7. வாடுமலர்ச் செண்டு - வாடியுள்ள பூப்பந்து.

8. கன்று ஒழிந்த - கன்றைப் பிரிந்த. கார்ஆ - காராம்பசு. அன்று அரற்றி - அன்று கதறி. அரிவை - பெண். மெய்ஞ்ஞானி - புத்தன்.

9. மனக்கவலை - வருத்தம்.

10. நாவிய - கல், மண், தூசு நீங்குமாறு நேம்பிய நாவுரி-நாழியும் உரியும் (முகத்தல் அளவைக்) கருவிகள்.

11. பக்கமாம் பதிகள் - பக்கத்து ஊர்களில்.

12. ஏழை - பரிதாபகரமான பெண். இரந்து - யாசித்து.

13. மனத்தெளிவு - மனந்தேறி இருக்கும் தன்மை. எங்குமிலாப் பொருள் - யாரும் இறவாத வீட்டில் கடுகு பெறல். தனயன் - மகன். அங்கம் எலாம் - உடல் எல்லாம். அகற்றல் - நீக்குதல்.

## கேள்விகள்

1. புத்தர் அங்கு எழுந்தருளிய நிலையை எழுதுக.
2. மகனை இழந்த தாயின் கோலம் எவ்வாறு இருந்தது ?
3. புத்தரிடம் மகனை இழந்த தாய் என்ன கூறினள் ?
4. தாயின் வேண்டுகோளை நிறைவேற்ற அவர் அவளிடம் என்ன கேட்டார் ? காரணம் என்ன ?
5. அத்தாய் வெறுங் கையளாகித் திரும்பிவரக் காரண மென்ன ?
6. உண்மை நிலை அறிந்த அத்தாய்க்கு எவ்வாறு புத்தர் அறிவுரை இயம்பினர் ?

# V. பல்சுவைப் பகுதி

## 1. துன்பத்திற்குமேல் துன்பம்

குரங்கனலில் வீழ்ந்துவெறி கொண்டுதேள் கொட்டக்
கரஞ்செறியப் பாம்பலவன் கவ்வ—விரைந்துபேய்
பற்றவே கள்ளுண்டு பச்சைமிள கைக்கடித்தால்
எத்தனைபார் சேட்டைக் கிடம் ?

—காளமேகப் புலவர்

## 2. தமிழ் நாட்டின் சிறப்பு

வேழ முடைத்து மலைநாடு ; மேதக்க
சோழ வளநாடு சோறுடைத்து ;—பூழியர்கோன்
தென்னாடு முத்துடைத்து ; தெண்ணீர்வயல்
நன்னாடு சான்றோர் உடைத்து. [தொண்டை

—ஔவையார்

## 3. வானவில்

படகுகள் தவழும் பரந்த நதிகளில்
கலங்கள் தவழும் கருங்கடல் பரப்பில்
வானந் தவழும் வள்ளிய கொண்டல்
அவற்றினை மிக்கு அமைந்தது அழகால் ;
கல்பொரு திறங்கிக் கடிதினில் பாயும்
ஆறுகள் புனைந்தன அழகுறு பாலம் ;
ஆனால் வானவில் அகலா காயம்
நின்று விண்ணும் நிலமும் சேர
மரங்கள் தம்மை மடக்கிப் பாலமாய்
வனப்புடன் திகழும் வாய்மை
இவற்றை மிக்கு இனிதா கும்மே !

—பாப்பிறையனார்

73
D31(b)
M57



## குறிப்புரை

(1) **காளமேகப் புலவர்:** ஊர் - திருவரங்கம். காலம் - திருமலைராயன் காலம்; சுமார் 250 ஆண்டுகளுக்கு முன். இயற்பெயர் - வரதன். மதம் - முதலில் வைணவராயிருந்து பின்னர் சைவராக மாறியவர். வசைபாடக் காளமேகம் என்று இவரைப் புகழ்வர்.

**அருஞ்சொற்பொருள்:** அனல் - நெருப்பு. கரம் - கை. அலவன் - நண்டு. சேட்டை - குறும்பு. வெறி - மயக்கம்.

(2) **ஔவையார்:** காலம்-சங்ககாலம். இவர் பெற்றோர் எவரெனத் தெரியவில்லை. ஆதிக்கும் பகவனுக்கும் பிறந்து பாணர் வீட்டில் வளர்ந்தவர் என்று ஒரு கதை கூறப்படுகிறது. இவர் பாடல்கள் மிகச் சிறந்தவை.

**அருஞ்சொற்பொருள்:** மேதக்க-மேன்மை பொருந்திய. மலைநாடு - சேரநாடு. பூழியர் - பாண்டிய நாட்டார். தென்னாடு - பாண்டிய நாடு. சான்றோர் - கல்வி கேள்விகளில் சிறந்த அறிஞர்.

(3) **வானவில்:** இஃது இப்பாட நூல்களின் ஆசிரியர்களில் ஒருவரான வித்துவான் S. நாகராசன், M. A., B. T. அவர்களால் இயற்றப் பெற்றது.

**அருஞ்சொற்பொருள்:** பரந்த-அகன்ற. கலங்கள்-கப்பல்கள். வள்ளிய-கொடைத் தன்மை உடைய. பொருது-தாக்கி. கடிது-விரைவு. அகலாகாயம்-அகல் + ஆகாயம். வனப்பு - அழகு.

### கேள்விகள்

1. குரங்கிற்கு ஏற்பட்ட துன்பங்கள் யாவை ?
2. தமிழ்நாட்டின் சிறப்பினை ஔவையார் எவ்வாறு கூறியுள்ளார் ?
3. வானவில் எவ்வாறு வருணிக்கப்பட்டுள்ளது ?

13149

1508/83 1C

Acc. 518

# Valluvar Tamil Vachakam

## For Form I—Part II

By

Vidwan: S. NAGARAJAN, M.A., L.T.,
(St. Mary's Training & High School for Women, Salem.)

AND

Vidwan: N. SUNDARARAJAN,
(Senior Tamil Pandit, St. Michael High School, Coimbatore.)

PUBLISHED BY:

SIVALINGAM PUBLISHING HOUSE,
EDUCATIONAL PUBLISHERS
ERODE.

Copyright] 1957 Price As. 10